முச்சந்தி முரளி



"உலகத்தில உள்ள எல்லா மோசடியும் இப்ப யாழ்ப்பாணத்தில தான் நடக்குது போல"

Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 220

புதன்கிழமை
03 ஜூலை 2024

ஆனி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை



## சம்பந்தனின் புகழுடலுக்கு பிரமுகர்கள் அஞ்சலிப்பு!

கொழும்பு, ஜூலை 3
இலங்கைத்தமிழரசுக் கட்சியின் மறைந்த சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் புகழுடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் என பிரமுகர்கள் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

☞ 15

# அதிகாரப் பகிர்வுதான் சம்பந்தருக்கான அஞ்சலி

## நாடாளுமன்றில் ரணில் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 3

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் எப்பொழுதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்காகப் பங்காற்றினார். அதிகாரப்பகிர்வு மேற்கொள்ளப்படவேண்டிய விதம் தொடர்பில் அவருக்குத் தனியான நிலைப்பாடு இருந்தது. அதை நிறைவேற்றுவதே அவருக்கான அஞ்சலி என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

☞ 15

## பயணத்தை மாற்றினால் படுகுழியில்தான் வீழ்வோம்

### நாடாளுமன்றத்தில் நேற்று ரணில் கருத்து

கொழும்பு, ஜூலை 3
தொங்குபாலத்தின் கஷ்டமான பயணத்தில் தொடர்ந்து செல்லவேண்டியுள்ளது. யார் ஆட்சிக்கு வந்தாலும் திரும்பி வரமுடியாது. மீண்டும் வேறு வழியில் திரும்பிச்செல்ல முற்பட்டால், 25 - 30 வருடங்களுக்கு மீட்டெடுக்க முடியாத நிலைக்குள் நாடு தள்ளப்படும் - என்று

☞ 15

## முரல்மீன் தாக்கி மீனவர் இறப்பு!

### குருநகரில் துயரம்



யாழ்ப்பாணம், ஜூலை 3
யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவரொருவர், முரல்மீன் கழுத்தில் பாய்ந்ததால் உயிரிழந்தார். குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த மைக்கல் கொலின் டினோஜன் (வயது-29) என்ற மீனவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
நேற்றுமுன்தினம் இரவு வலையை இழுத்

☞ 15

## தேசிய அரசுக்கு ஒத்துழைக்கோம்

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 3
தேசிய அரசு அமைக்கப்படுவதற்கு மேற்கொள்ளப்படும் எந்த முயற்சிக்கும் ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தேசிய அரசொன்றை அமைக்கும் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்

☞ 15

## புலிகளுக்கு ஆயுதம்? மறுக்கிறது ஜே.வி.பி.!



கொழும்பு, ஜூலை 3
விடுதலைப் புலிகளுக்கு ஜே.வி.பி.யினர் ஆயுதம் வழங்கினர் என இராஜாங்க அமைச்சர் பிள்ளையானால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றோம் என்று ஜே.வி.பி.யின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும்,

☞ 15



## ஆள் மாறாட்டம் செய்து உறுதி உரிமை மாற்றம்

### இருவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜூலை 3
வெளிநாட்டில் வசித்துவரும் ஒருவருக்குச் சொந்தமான காணியை, ஆள்மாறாட்டம் செய்து உரிமை மாற்றம் செய்த சகோதரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

☞ 15

### ஆவணமோசடி

## சட்டத்தரணி அலுவலகத்தில் பொலிஸார் தேடுதல் வேட்டை!

### உடுவில் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 3
யாழ்ப்பாணம் - உடுவில் பகுதியில் உள்ள பிரபல சட்டத்தரணியொருவரின் அலுவலகத்தில், பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.
இத்தாலியைச் சேர்ந்த பெண்ணொருவர், யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி விவாகரத்துக்கு விண்ணப்பிக்கச் சென்ற போது, அவர் ஏற்கனவே விவாகரத்துப் பெற்றுள்ளார் என்று தரவுகள் வெளிக்காட்டியுள்ளன. அந்தப் பெண் அதுவரை விவாகரத்துக்கு விண்ணப்பிக்காத

☞ 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மக்களின் குடிமனைக்குள் மதுபானசாலை வேண்டாம்

## இயக்கச்சி மக்கள் ஆர்ப்பாட்டம்!

**கிளிநொச்சி, ஜூலை 3**

**கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட இயக்கச்சியில் புதிதாக மதுபானசாலை ஒன்று அமைக்கப்படவுள்ளதை எதிர்த்து கிராம மக்கள், அமைப்புகள் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.**

நேற்றுச் செவ்வாய்க்கிழமை இயக்கச்சி சந்தி ஏ-9 வீதி அருகே இந்த கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

மதுபானசாலை அமைக்கப்படவுள்ள இடத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் பாடசாலை அமைந்துள்ளது. அருகே கோவில், பொதுச்சந்தை என்பனவும் காணப்படுகின்றன. மக்கள் செறிந்துவாழும் குடிமனைக்குள் மதுபானசாலைக்கு அனுமதி வழங்கினால் பல குற்றச்செயல்கள் தலைதூக்கும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். போராட்டத்தின் முடிவில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளரிடம் மனுவொன்றையும் கையளித்திருந்தனர். (ச-113)



## பொன்சேகா போகலாம்!

கொழும்பு, ஜூலை 3

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பொன்சேகா எந்நேரமும் வெளியேறலாம். அவருக்கான கதவு திறந்தே உள்ளது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்..

அரச தரப்பின் ஒப்பந்தத்தையே பொன்சேகா நிறைவேற்றிவருகின்றார். அவரின் நூல் வெளியீட்டு நிகழ்வைக்கூட ஜனாதிபதி செயலகமே நடத்தி இருந்தது. எனவே, அவர் தற்போது எந்தப் பக்கம் நிற்கின்றார் என்பது தெளிவாகின்றது. அவர் எமது அணியில் இருந்து வெளியேறலாம். அதனால் பாதிப்பில்லை. ஆனால் இப்படி கட்சியை, தலைமையைத் தாக்கிவிட்டு விடைபெற முற்படுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல - என்றார். (ச-44)



## பட்டதாரிகளை ஏமாற்றாதே திருமலையில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, ஜூலை 3

திருகோணமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தினால் 'அனைத்துப் பட்டதாரிகளுக்கும் பாரபட்சம் இன்றி தொழிலை வழங்கு' என்ற கோரிக்கையின் அடிப்படையில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாணசபைக்கு முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பட்டதாரிகள் "கனவுகளோடு பட்டம் பெற்ற எம்மை கண்ணீரோடு போராட செய்யாதீர்", "பல்கலைக்குச் சென்றது இன்று பட்டினியில் கிடக்கத்தானா?", "கஷ்டப்பட்டு பெற்ற பட்டம் வீட்டிலே பட்டதாரிகள் நாங்கள் வீதியிலே" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-125)

## பஸ்களில் வலைவீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 3

நிர்ணயிக்கப்பட்ட தொகையைவிட அதிக கட்டணம் வசூலிக்கும் பேருந்துகளை கண்டு பிடிப்பதற்காக விசேட சோதனை நடத்தப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்தத் திட்டம் நேற்று முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

பேருந்துக் கட்டணம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 5.07 வீதத்தால் குறைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ஐ.தே.கட்சியுடன் கூட்டணியில்லை

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைக்கும் எந்த எண்ணமும் இல்லை. சிறிகொத்தவை கைப்பற்றும் நோக்கமும் எமக்குக் கிடையாது என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையுடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே புதியதொரு அரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்பினோம். அதற்கு மக்கள் பேராதரவு கிடைத்துள்ளது - என்று அந்தக் கட்சியின் செயலர் தெரிவித்தார். (ச-44)



## சொந்தக் காசில் 'ஜெட்' வாங்குவேன்

பியூமி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 3

தனியார் ஜெட் ஒன்றை கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளதாக பிரபல மொடல் அழகி பியூமி ஹன்சமாலி தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத சொத்துக் குவிப்பு விசாரணைப் பிரிவில் முன்னிலையாகி, அங்கிருந்து வெளியேறிச் சென்றபோது அவர் இதனை ஊடகங்களிடம் கூறியுள்ளார்.

அழகுசாதனப் பொருள்களை விற்பனை செய்து தாம் வருமானம் ஈட்டியதாகவும் வேறு எந்தவொரு வியாபாரமும் எமக்குக் கிடையாது எனவும் பியூமி தெரிவித்துள்ளார். (ச-இ)

### அறிவுறுத்தல் உதாசீனம்

## உணவகத்துக்கு 'சீல்' 90,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணத்தில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்றுக்குச் 'சீல்' வைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த உணவகத்துக்கு 90 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் கடந்த முறை அறிவுறுத்தப்பட்ட அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்ததுடன் தொடர்ச்சியாக சுகாதாரச் சீர்கேட்டுடன் உணவகத்தை நடத்தியமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து உரிமையாளருக்கு எதிராக யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து திருத்த வேலைகள் முடிவடையும் வரை உணவகத்தைச் சீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்டதுடன் 90 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்தார். (ச-66)

## அ.அட்டைகள் கிடைப்பதில் தாமதம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

விண்ணப்பிக்கப்படும் தேசிய அடையாள அட்டைகள் ஆட்பதிவுத் திணைக்களத்தால் உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படுவதில்லை என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதேச செயலகம் ஊடாக விண்ணப்பங்கள் அனுப்பி ஆறு மாதங்களுக்கு மேலாகியும் தமக்கு அடையாள அட்டைகள் கிடைக்கப்பெறவில்லை.

தொலைந்த, பழுதடைந்த மற்றும் பெயர் மாற்றம், புதிதாகப் பெறல் போன்ற பல வேறு தேவைகளுக்காக பிரதேச செயலகம் ஊடாக அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருந்தோம்.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஒருநாள் சேவைக்காக ஆட்பதிவுத் திணைக்கள அலுவலகத்துக்கு செல்வோருக்கு உடனடியாக தேசிய அடையாள அட்டை கையளிக்கப்பட்டது.

எனினும் பிரதேச செயலகம் ஊடாக விண்ணப்பங்கள் அனுப்புவோர் மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது என்று மக்கள் தெரிவித்துள்ளனர். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண அபிவிருத்தி ஜூலைக்குள் பூர்த்தி செய்க!

## மாவட்டச் செயலர்களுக்குப் பணிப்புரை

**கொழும்பு, ஜூலை 3**

**பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களையும் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக பூரணப்படுத்துமாறு சகல மாவட்ட செயலர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.**

யாழ். மாவட்டத்தில் 828 வேலைத்திட்டங்களுக்காக 322 மில்லியனும், வவுனியாவில் 470 வேலைத்திட்டங்களுக்காக 115 மில்லியனும், மன்னாரில் 377 வேலைத்திட்டங்களுக்காக 113 மில்லியனும், கிளிநொச்சியில் 174 வேலைத்திட்டங்களுக்காக 80 மில்லியனும், முல்லைத்தீவில் 329 வேலைத்திட்டங்களுக்கு 115 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆகக்குறைந்த தொகையாக கிளிநொச்சி மாவட்டத்துக்கு 80 மில்லியனும், ஆக்ககூடுதலான தொகையாக கொழும்பு மாவட்டத்துக்கு 1083.5 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ச-25,6)

## ராஜபக்சக்களை தண்டிப்பதே நற்செய்தி

கொழும்பு, ஜூலை 3

எப்போது ராஜபக்சக்கள் தண்டிக்கப்படுகிறார்களோ அன்றைக்குத்தான் இலங்கைக்கு நல்ல செய்தி என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமை அலுவலகமான ஸ்ரீகோத்தாவுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடுதற்போது வங்குரோத்திலிருந்து மீண்டு விட்டது. இது ஒரு நல்ல செய்தி என உரையாற்றியிருந்தார்.

ஜனாதிபதியின் உரைக்குப் பதிலளிக்கும் முகமாக பெண்கள் சிலரால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சாதாரண பொதுமக்கள் இன்னும் வங்குரோத்திலிருந்து மீளவில்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர். (ச-6)

### மாணவர் விசாக் கட்டணம்

## அவுஸ்திரேலியாவுக்கு இருமடங்கு அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 3

அவுஸ்திரேலிய அரசாங்கம் மாணவர் விசாக் கட்டணத்தை இரு மடங்காக அதிகரித்துள்ளது.

இதுவரை காலமும் 710 அவுஸ்திரேலிய டொலராக இருந்த மாணவர்களின் விசாக் கட்டணம் இம்மாதம் முதலாம் திகதி முதல் 1600 அவுஸ்திரேலிய டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் அவுஸ்திரேலிய விசாக் கட்டணம் பல மடங்காகியுள்ளது. அவுஸ்திரேலியாவில் விசாக் காலம் முடிவடைந்த பின்னரும் சட்டத்திலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி தொடர்ந்து தங்கியிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நோக்குடனே விசாக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-6)

## ரயில் நிலையங்களில் கழிப்பறை வசதிகள்

கொழும்பு, ஜூலை 3

புகையிரத நிலையங்களில் கட்டண கழிப்பறை வசதிகள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக புகையிரத பதில் பொது முகாமையாளர் முதலிகே தெரிவித்துள்ளார்.

கட்டணக் கழிப்பறைகள் ஏற்கனவே 20 புகையிரத நிலையங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

கட்டணமற்ற (இலவச) கழிப்பறைகளும் புகையிரத நிலையங்களில் இருக்குமெனவும் கட்டணக் கழிப்பறைக்கு 50 ரூபா கட்டணம் அறவிடப்படவுள்ளது.

கட்டணக் கழிப்பறை பராமரிப்பு பணிகள்தனியார்நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ச-6)

## கொடுப்பனவு ரூபா 25,000

கொழும்பு, ஜூலை 3

இந்த மாதத்திலிருந்து, நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு விசேட கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது என பொது நிர்வாக அமைச்சு சுற்றுநிருபம் வெளியிட்டுள்ளது.

புதிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் பொறியியலாளர்கள், கட்டடக்கலைஞர்கள், நில அளவையாளர்கள் ஆகியோருக்கும் இந்த விசேட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் பழைய சுற்றுநிருபங்கள் யாவும் இரத்துச்செய்யப்படுவதாகவும் பொதுநிர்வாக அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (ப-6)



## அமெரிக்கப் பிரதிநிதி ஜனாதிபதியுடன் சந்திப்பு

இலங்கைக்கு வருகைதந்துள்ள அமெரிக்கப்பிரதி உதவி இராஜாங்க செயலர் றொபேர்ட் கோர்த் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பின் போது பொருளாதார மீட்சிக்கு பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை என்பன அவசியம் என்று றொபேர்ட் கோர்த் வலியுறுத்தியுள்ளார். கலந்துரையாடலில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கும் கலந்துகொண்டார். (ச-25,6)

## தினம் தெரியுமோ?

நல்லூர்க் கோயில் வழக்குப் பற்றி ரண்டு நாளா பட்சி சொல்லேக்க, போன திங்கட்கிழமை கோர்ட்டில கேஸ் வருகுதெண்டு சொன்னதும் உங்களுக்கு நினைவிருக்கும். பிறகு அதைப்பற்றி பட்சி ஒண்டும் சொல்லேலை எண்டும், பேப்பர்களில அதைப்பற்றி ஒரு செய்தியையும் காணேலை எண்டும் கனபேர் பட்சிக்கு போன் அடிச்சுக் கேட்டபடி இருக்கிறதால, அந்தக் கேஸ் பற்றிச் சொல்லத்தானே வேணும்.

நல்லூர்க்கோயில் திருவிழா நேரத்தில கோயிலைச் சுத்தி என்னென்ன நடைமுறை இருக்கோணும் எண்டது இதுவரைக்கும் வாழையடி வாழையா முந்திச் செய்ததைப் பார்த்துப் பார்த்து செய்துகொண்டு வந்தவையே தவிர, அதுக்கெண்டு ஒரு திட்டவட்டமான ரூல்ஸ் இருக்கேலை. அதால கனபிரச்சினையள் வருகுதெண்டும், அப்பிடி பிரச்சினையள் வராமல் இருக்கவும் தான் முனிசிபல்காரர் இந்த நடைமுறையளை வர்த்தமானியாக்கி விட்டவை. அந்த வர்த்தமானியிலையும் இப்ப இவையள் வானத்துக்கும் பூமிக்கும் குதிக்கிற அளவுக்கு புதிசா எந்தவொரு இறுக்கமான நடைமுறையைப் பற்றியும் சொல்லுப்படேலை. இவ்வளவு நாளும் என்ன நடைமுறை இருந்ததோ அதைத்தான் இப்ப வர்த்தமானியில போட்டிருக்கினம். ஆனால் அந்த வர்த்தமானியை விடேக்க தங்களோட கதைக்காமல் விட்டிட்டினம் எண்டதுதான் சிலரின்ர மனப் புழுக்கம். அந்தப் புழுக்கத்தை சந்தர்ப்பமா சிலர் நல்லவடிவா ஊதிப்பெருப்பிக்க, பதினேழு பேர் கோர்ட்டில கேஸ் போட்டவை.

திங்கட்கிழமை இந்தக் கேஸ் விசாரணைக்கு வரமுதலே, உள்ளுக்கால முனிசிபல்காரரும், கேஸ் போட்டவையும் கதைச்சுப் பேசி இருக்கினம். அதின்படி ஒரு உடன்பாட்டுக்கு வாறதெண்டுதான் ஞாயிற்றுக்கிழமை மட்டும் முடிவா இருந்திருக்கு. அதுக்கெண்டு ஒரு ஒப்பந்தமும் ரெடி பண்ணினவை. அதில வர்த்தமானியில இருக்கிற 31 விசயங்களில பத்து விசயங்களை மாத்துறதெண்டு ரண்டு தரப்பும் முடிவெடுத்தவை., அந்தப் பத்து விசயங்களில ரண்டு விசயம் தான் வழக்குப் போட்டவைக்கு முக்கியமாம்.

'கோயில் திருவிழா நடக்கேக்க ஒருத்தரும் வீதித்தடை போட்ட ஏரியாவுக்க செருப்போட போக கூடாது, வாகனத்தை உள்ளுக்க கொண்டு போகேலாது ' எண்டு வர்த்தமானியில இருக்கு.

ஆனால் 'வெளியாக்கள் மட்டும் தான் செருப்போட போகக்கூடாது, வாகனத்தை உள்ளுக்க கொண்டு போகேலாது. ஆனால் வீதித்தடைக்குள்ள வீடு,கடை உள்ளவை செருப்போடயும் போக லாம், வாகனத்தோடையும் போகலாம்' எண்டு மாத்துறதெண்டது தான் அந்த ஒப்பந்தத்தில இருக்கிற முக்கியமான விசயங்கள், இதை மற்றவை கண்டுபிடிக்கக்கூடாது எண்டுதான் மிச்ச எட்டு விசயங்களையும் போட்டு அந்த ஒப்பந்தத்தில சடைஞ்சிருக்கினம். ஆனால் இவை ஒண்டு நினைக்க, முருகன் வேற ஒண்டை நடத்தினால் என்ன செய்யிறது?

திங்கட்கிழமையே இந்த ஒப்பந்தத்தோட எல்லாம் 'சுமுகமா' தாங்கள் நினைச்சபடி முடிவு வந்திடும் எண்டு நினைச்சவைக்கு முருகன் ஒரு ஆப்பொண்டு வைச்சிட்டார். அது என்ன ஆப்பு?

இப்ப சொல்ல இடம் காணாது. நாளைக்கு பட்சி கட்டாயம் சொல்லும்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'றைனோஸ் கரப்பந்தாட்ட பிறீமியர் லீக்'

# கிண்ணத்தை சுவீகரித்தது 'விசி கிங்ஸ்' அணி

**யாழ்ப்பாணம், ஜுலை 3**

**உதயன் பத்திரிகையின் அனுசரணையுடன் சுழிபுரம் றைனோஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 'றைனோஸ் கரப்பந்தாட்ட பிறீமியர் லீக்' தொடரில் 'விசி கிங்ஸ்' அணி சம்பியனானது.**

சுழிபுரம் றைனோஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் உதயராஜ் தலைமையில் வட்டுக்கோட்டை, பிளவத்தையில் அமைந்துள்ள இளைய நட்சத்திர விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் 'விசி கிங்ஸ்' அணியும் 'யங்ஸ் ஸ்ரார்' அணியும் மோதிக் கொண்டன. மிகவும் பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தின் முதல் சுற்றில் 'விசி கிங்ஸ்' அணி வெற்றி பெற்றது. அதன்பின்னர் தங்கள் ஆதிக்கத்தைக் காட்டிய 'யங்ஸ் ஸ்ரார்' அணி அடுத்த இரு ஆட்டங்களிலும் வெற்றி யீட்டியது.

ஆனால், அடுத்த இரு ஆட்டங்களிலும் மீண்டும் 'விசி கிங்ஸ்' அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றி கொண்டது. இறுதியில் 3:2 என்ற அடிப்படையில் வெற்றியீட்டிய 'விசி கிங்ஸ்' அணி 'றைனோஸ் கரப்பந்தாட்ட பிறீமியர் லீக்' தொடரின் சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கி, 50 ஆயிரம் ரூபா பணப் பரிசையும் தட்டிச் சென்றது.

இறுதியாட்டத்தின் நாயகனாக 'விசி கிங்ஸ்ங அணி வீரர் ஜனாவும், ஆட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்திய வீரராக 'விசி கிங்ஸ் 'அணியின் ஜிந்துஜனும், தொடரின் சிறந்த அறைதலுக்கான (best attacker) வீரராக 'யங்ஸ் ஸ்ரார்' அணியின் அபிரங்கனும், சிறந்த ஒழுங்கமைப்பாளராக 'விசி கிங்ஸ்' அணியின் சாந்தராஜும், சிறந்த தடுப்பாளராக அம்பாள் வொலி ஸ்ரார் அணி வீரர் விதுசனும், பெறுமதிமிக்க வீரராக 'யங்ஸ் ஸ்ரார்' அணியின் வீரர் அபிரங்கனும், 2024ஆம் ஆண்டு பிறீமியர் லீக்கின் நாயகனாக 'விசி கிங்ஸ்' அணியின் சாந்தராஜும் தெரிவு செய்யப்பட்டனர்.

உதயன் குழுமத்தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், திருமதி யசோதை சரவணபவன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரின் இணைப்பாளர் பிரதாப், றைனோஸ் விளையாட்டுக்கழகத் தலைவர் உதயராஜ், யுனிவேர்சல் ஸ்போர்ட்ஸ் உரிமையாளர் விதுசன் ஆகியோர் இறுதியாட்ட நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். (எ-125)

## இசைப்பேழை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜுலை 3

அச்சுவேலி, காட்டுவளவு கந்தசுவாமி மீது பா.அர்ச்சனாவால் எழுதிப் பாடப்பட்ட 'அர்ச்சனைப் பூக்கள்' எனும் இசைப்பேழைவெளியீட்டுவிழா இன்று புதன்கிழமை அச்சுவேலி காட்டு மலைக் கந்தசுவாமி ஆலய முன்றலில் இரவு 9.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

மன்னார் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞான.ஆதவன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் பிரதம விருந்தினராகவும், முன்னாள் அதிபர் ச.சத்தியவரதன், இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் தயாளினி குமாரசாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-66)

## திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஜுலை 3

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் புனரமைக்கப்பட்ட ஆரம்பப் பிரிவு வகுப்பறைகள் அதிபர் க.உமாபாலன் தலைமையில் இன்று புதன் கிழமை திறக்கப்படவுள்ளன. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.என்.சுதர்சன் கலந்து கொள்ளவுள்ளார். (எ-25-159)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜுலை 3

கோண்டாவில் கிழக்கு ஆசிமடப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், நடைபெறவுள்ளன. (ச-25-66)

## கைதடியில் யாழ். முற்றம்

யாழ்ப்பாணம், ஜுலை 3

உள்ளூர் உற்பத்திப் பொருட் சந்தையான யாழ். முற்றம் திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை09.30 மணியளவில் கைதடி அம்மாச்சி உணவகம் முன்பாக இடம்பெறவுள்ளது. (ச-66)

## பரிசில் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜுலை 3

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி லலிதாமலர் முகுந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆ. நித்திலவர்ணன் கலந்து கொள்வார். (ச-9)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். தெய்வ வழிபாடு செய்வீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிலும் பொறுமையைக் கடைப் பிடிக்கவேண்டிய நாள். சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிறு சங்கடம் ஏற்படக்கூடும். பாதிப்பு எதுவும் இருக்காது. முடிவு எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். நண்பர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிணக்குகள் நீங்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சுபச்செய்தி கிடைக்கும்.

**துலாம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம் :** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆதாயம் உண்டாகும். தாயின் உடல் நலனில் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும். பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**தனுசு:** மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நிகழும் நல்ல நாள். ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உற்சாகமாகச் செயற்படுவீர்கள். விநாயகரை வழிபட காரியங்கள் சாதகமாகும்.

**மகரம்:** முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். செலவுகள் ஏற்படும். சிவபெருமானை வழிபட பல வகைகளில் நன்மைகள் ஏற்படும். விற்பனையை அதிகரிக்க கூடுதலாக உழைக்க வேண்டி வரும்.

**கும்பம்:** நினைத்த காரியத்தை முடிப்பதில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். ஆதாயம் கிடைக்கும். பணவரவும் பொருள்சேர்க்கையும் ஏற்படும். மகிழ்ச்சியான நாளாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரா. சம்பந்தனின் மறைவுக்கு பலரும் இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 3

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் முன்னாள் தலைவரும், இலங்கையின் மூத்த அரசியல்வாதியுமான இரா.சம்பந்தனின் மறைவுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தலைவர்கள் இரங்கல் வெளியிட்டுள்ளனர்.**

**சஜித் பிரேமதாஸ**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது இரங்கல் செய்தியில், அரை நூற்றாண்டுக்கும் மேலாக இலங்கைக்கு சேவையாற்றிய சம்பந்தனின் மறைவுக்கு இன்று ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம். அனைத்து இலங்கையர்களுக்கும் சம உரிமைகளை வழங்குவதற்கான அவரது அர்ப்பணிப்பு நம்பிக்கையின் கலங்கரை விளக்காகும். அவருடைய நேர்மையான மற்றும் நியாயமான தலைமை எனக்கும் மற்றவர்களுக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கும். உண்மையில், இது ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

**மஹிந்த ராஜபக்ச**

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச விடுத்துள்ள இரங்கல் செய்தியில், அவர் எனது நீண்டகால நண்பர். நாங்கள் கடந்த பல காலங்களாக பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம். சம்பந்தனின் மறைவு இலங்கை அரசியல் சகோதரத்துவத்துக்கும் மற்றும் அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு ஒரு பெரும் இழப்பாகும் என்று தெரிவித்துள்ளார்.

**அலி சப்ரி**

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தனது இரங்கல் செய்தியில், தமிழ்ச் சமூகத்தின் அசைக்கமுடியாத அரசியல்வாதியும் உயர்ந்த ஆளுமையுமான ஆர். சம்பந்தனின் மறைவு ஆழ்ந்த கவலை அளிக்கிறது. ஜனநாயகம் மற்றும் அதிகாரப் பகிர்வு மீதான அவரது உறுதியான நம்பிக்கை, எப்போதும் "பிரிக்கப்படாத மற்றும் பிரிக்கமுடியாத இலங்கைக்குள்" என்றென்றும் எதிரொலிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**இ.அங்கஜன்**

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், தமிழ்த் தேசியப்பரப்பின் மூத்த அரசியல், சட்ட ஆளுமை தமிழ்த் தேசத்திலிருந்து தன்னை நிரந்தரமாக விடுவித்துக்கொண்டது. அவரின் மறைவு தமிழ்த் தேசிய அரசியல் பரப்புக்கு பேரிழப்பாகும் என்று தெரிவித்துள்ளார்.

**க.ச.குகதாசன்**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான க.ச.குகதாசன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும், அரை நூற்றாண்டாகத் திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி செயற்பட்டவரும், இலங்கைத் தமிழர் இனச் சிக்கலுக்குத் தீர்வு காண அயராது உழைத்து வந்தவருமான சம்பந்தன் இயற்கை எய்திய செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

**வடக்கு மாகாண ஆளுநர்**

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தனது இரங்கல் செய்தியில், அன்னாரின் மறைவானது இலங்கை வாழ் மக்களுக்குப் பேரிழப்பாகும். பெரும் தலைவராக விளங்கிய அவரது மறைவு தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் நிரப்பமுடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்**

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) விடுத்துள்ள இரங்கல் செய்தியில், இரா.சம்பந்தன் போரின் பின்னர் தமிழ்ச் சமூகத்தின் குரலாகத் தென்னிலங்கைச் சமூகம் மற்றும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் அங்கீகாரம் பெற்றிருந்தார்.

பொதுவெளியிலும், ஊடகங்களுடனான செவ்விகளின் போதும் கருத்துகள் வெளிப்படுத்தும் போது நிதானமான, வரலாற்றுத் தரவுகளுடனான அவருடைய சொல்லாடல்கள் மற்றும் கருத்துப் பகிர்வுகள், அரசியல் பரப்பில் இயங்குகின்ற அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய முன்னுதாரணமான பண்பாகும் என்று குறிப்பிட்டுள்ளது.

**மனோ கணேசன்**

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், இரா.சம்பந்தன் "பல்லினபன்மொழிபன்மத" இலங்கையன். பன்மைத்துவம் என்ற அடிப்படையில் சேர்ந்து வாழ்வோம் என்று உலகறியச் சொன்னவர்.

அறிவு, ஆன்மா, உடல் என்ற மனித கூறுகளில், உடலால் மட்டுமே பலவீனமாகி இறுதிக் காலத்தில் இருந்தார். அறிவும், ஆன்மாவும் பலம் இழக்கவே இல்லை. நான் அவரது கட்சி அங்கத்தவன் இல்லை. ஆனால், இந்த "சிங்க கொடி முதல் வழி காட்டல் குழு" சம்பவங்கள் வரை எல்லாவற்றையும் அவருக்கு மிக பக்கத்தில் இருந்து நேரடியாக பார்த்தவன் நான்.

அவரை மதித்து, அவரைப் பயன்படுத்தி, பிரிபடாத இலங்கைக்குள் தீர்வு தேடத் தவறிய அனைத்து சிங்கள - பௌத்த தேசியக் கட்சிகளின் தலைவர்களும் இப்போது வரிசையாக வந்து, "இரா. சம்பந்தனுடன் எனக்கு முப்பது வருட பழக்கம், நாற்பது வருட பழக்கம், ஐம்பது வருட பழக்கம் என்று அளப்பார்கள். அதையும் உங்கள் சாகாத ஆன்மா எங்கோ இருந்தபடி கேட்கப் போகிறது. பிரிவோம் சந்திப்போம் என்று தெரிவித்துள்ளார்.

**சிவஞானம் சிறீதரன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், சம்பந்தனின் இழப்பு தமிழ் மக்களைப் பொறுத்தவரை காலத்தின் பேரிழப் பாகும். அவரின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் கருத்தில் கொண்டு அவர் விட்டுச்சென்ற பயணத்தில் நாங்கள் ஒற்றுமையாக இணைந்து தமிழ்த்தேசியத்தை வென்றெடுப்போம்.

தமிழ்த்தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்கான நீண்ட பயணத்தில் எங்களுடைய கரங்களை ஒன்றாக இணைத்து பயணிப்பதே நாங்கள் அவருக்குச் செய்யும் பணியாக மாறும் என்றுள்ளது.

(எ-20-26-125-66-113-159)



# இரா. சம்பந்தனுக்கு கிளிநொச்சியில் அஞ்சலி

கிளிநொச்சி, ஜூலை3

மறைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனுக்குத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையான அறிவகத்தில் நேற்றுமுன்தினம் அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது. நிகழ்வில் சம்பந்தரின் உருவப்படத்திற்கு முன்பாக நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு அதனைத் தொடர்ந்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. கிளிநொச்சி மாவட்டப் பணிமனை முன்றலில் தமிழரசுக் கட்சியின் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டிருந்தது. (எ-66-26-125-159)

# அரசியல் வரலாற்றில் தடம்பதித்தவர் சம்பந்தன்

## காதர் மஸ்தான் அஞ்சலி



யாழ்ப்பாணம், ஜூலை 3

இரா.சம்பந்தன் நீண்ட நெடிய அரசியல் பாரம்பரியத்தைக் கொண்ட அவர் இலங்கைத் தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவர்களில் ஒருவராக விளங்கினார்.

அவரது இழப்பானது அரசியலில் மாபெரும் இடைவெளியை தோற்றுவித்துள்ளது.

இவ்வாறு கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான் இரங்கல் தெரிவித்துள்ளார்.

பல்வேறுபட்ட சோதனையான காலங்களிலும் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக உறுதுணையாக நின்றார். தனது வாழ்நாளில் அரிய சேவைகள் பல செய்த அவர் இலங்கை அரசியல் வரலாற்றில் தனக்கென பொன்னான வரலாறொன்றை ஆழப்பதித்துச் சென்றுள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ச)

# சிறுபான்மைச் சமூகத்துக்கு தன்னை அர்ப்பணித்தவர்

## முஸ்லிம் காங்கிரஸ் அனுதாபம்

கிளிநொச்சி, ஜூலை 3

சிறுபான்மைச் சமூகங்களுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க தனது வாழ்நாளை அர்ப்பணித்த தலைவர்கள் வரிசையில் தனியிடம் வகித்தவர் இரா.சம்பந்தன். அவரது மறைவு சர்வதேசரீதியில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

-இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பைசால் காசிம் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் வேரூன்றியுள்ள இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க தனது வாழ்நாள் பூராகவும் காத்திரமான பங்களிப்பை வழங்கிவந்த மூத்த தலைவர் ஒருவரை இழந்திருப்பதானது சர்வதேசரீதியில் பெரும் துயரை ஏற்படுத்தியுள்ளது. சிறுபான்மைச் சமூகங்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொடுக்க முனையும் தலைமைகளுக்கு சம்பந்தனின் இடைவிடாத செயற்பாடுகள் என்றும் முன்னுதாரணமானவை - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கட்சிகளின் திரள்வே சம்பந்தனுக்கான அஞ்சலி

## ஜனநாயகப் போராளிகள் தெரிவிப்பு




இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பெருந் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் பூதவுடல் நேற்றுச் செவ்வாய்க் கிழமை காலை கொழும்பு பொரளை ஏ.எப்.ரேமண்ட் மலர்ச்சாலையில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது இறுதி மரியாதையைச் செலுத்தினார். (ச-66)

**யாழ்ப்பாணம், ஜுலை 3**

**இரா.சம்பந்தன் ஐயாவின் மறைவு தமிழ்த்தேசிய அரசியல் தளத்தில் தலைமைத்துவ வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனை நிரப்பிக் கொள்ளவேண்டிய காலக் கடமை தளத்தில்செயலாற்றுகின்ற அனைத்துத்தமிழ்த்தேசிய அரசியல்கட்சிகளுக்குமுள்ளது. அனைவரும் ஓரணியில் திரளாக ஒன்றுபடுவதே நாம் இரா.சம்பந்தனின் ஆன்மாவுக்குச் செய்கின்ற உண்மையான அஞ்சலியாகும்.**

- இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது. அந்தக் கட்சியின் இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2004 தமிழினத்தின் ஜனநாயக ஒற்றுமையினைக் கருத்தில் கொண்டு அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஜனநாயக அரசியல் பலத்தினை மக்கள் ஆணைக்காகக் கொண்டு செல்லும் செயற்பாடுகளில் தலைமையாக இரா.சம்பந்தன் சிறப்பாகச் செயலாற்றினார். தமிழினம் இனப்பிரச்சினைக்கானநிரந்தரத் தீர்வுமின்றி சமூக, பொருளாதார, அரசியல் பலம் சிதைவுகளுக்கு உள்ளாக்கப்பட்டுத் திக்கற்ற நிலையில் தமிழினத்தின் தற்போதைய நிலையில் இரா. சம்பந்தனின் இழப்பு பேரிழப்பாகும். அதன் தாக்கமானது எதிர்காலத் தாயக பிராந்திய சர்வதேச அரசியல் விவகாரங்களைக் கையாளுகின்றபோது தமிழினத்துக்குப்பெரும்பின்னடைவுகளை உருவாக்கும். அந்தவகையில் அனைத்துத் தமிழ்த்தேசியக் கட்சிகளும் ஒன்றிணைவதே இரா.சம்பந்தனுக்கு நாம் ஆற்றுகின்ற அஞ்சலியாகும் -என்றுள்ளது. (ச-66)



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் சம்பந்தன் ஐயாவின் புகழுடலுக்கு உதயன் குழுமத்தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் யசோதை சரவணபவன் அஞ்சலி செலுத்தினர். (ச-125)

# தமிழினப் பிரச்சினையை வெளிக்கொணர்ந்தவர்

## சுவிஸ் தமிழ்ப் பேரவை அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜுலை 3

தமிழினப் பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு எடுத்துரைத்தவர் இரா.சம்பந்தன். அவரின் இழப்பு இலங்கைத் தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது உலகத் தமிழர்களுக்கும் பேரிழப்பாகும் என்று சுவிஸ் தமிழ்ப் பேரவையின் முன்னாள் செயலர் த. நமச்சிவாயம் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தியில்

அமெரிக்கா, பிரிட்டன், ஐ.நா. உட்பட பிரதான தரப்புகளுடன் தமிழர் பிரச்சினையை பல தடவைகள் எடுத்துக் கூறியவர். தமிழரின் அபிலாஷைகள், தீர்வுகளை சர்வதேசத்துக்கு புகட்டியவர். சர்வதேசம் மூலம் தீர்வொன்றை எட்டுவதற்கு அரும்பாடுபட்டவர். அவரது இழப்பு உலகத் தமிழ் மக்களுக்கு பேரிழப்பே- என்றுள்ளது. (ச-25)



# தமிழரசு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜுலை 3

மறைந்த இரா.சம்பந்தனுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியினரால் யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியிலுள்ள தலைமைச் செயலகத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழரசுக்கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ். குலநாயகம், யாழ். மாநகரசபையின் முன்னாள் மேயர் இமானுவேல் ஆர்னால்ட் உள்ளிட்ட கட்சியின் ஆதரவாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ச-125)

# விடுதலைப் போராட்டத்துடன் கைகோர்த்த பெருந்தலைவர்

## சித்தார்த்தன் எம்.பி. இரங்கல்

கொழும்பு, ஜுலை 3

தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் மிக நீண்ட காலமாகச் செயற்பட்டு வந்த சம்பந்தன், தந்தை செல்வா முதல் இன்றைய தலைமுறையினர் வரை கை கோர்த்துப் பயணித்த ஒரு பெருந்தலைவர்.

-இவ்வாறு புளொட்டின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன் அஞ்சலித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட இரங்கல் குறிப்பில், சம்பந்தரின் திறமை மற்றும் பண்பு, பின்வந்த காலங்களில், குறிப்பாக போரின் பின்னர் தமிழ்ச் சமூகத்தின் குரலாக, தென்னிலங்கைச் சமூகம் மற்றும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் அவர் அங்கீகாரம் பெறக் காரணமாயின.

அவரது அரசியல் அபிலாஷைகள், கனவுகள் மெய்ப்பட வேண்டுமெனில், வேறுபாடுகளை களைந்து ஒன்றுபட்டு முன்வருவதே அவருக்கான ஆழமான அஞ்சலியாக இருக்க முடியும் - என்றுள்ளது. (ச-20-27-125)

# தமிழ்த்தேசியம் விலை போகாமல் பாதுகாத்தவர்

## ரிஷாத் பதியுதீன் பகிர்வு



மன்னார், ஜுலை 3

நீண்ட அரசியல் வரலாற்றனுபவமுள்ள சம்பந்தன் ஐயா, தமிழ்த் தேசிய அரசியலை மிக சாதுரியமாக வழிநடத்தினார்.

-இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தின் மீது அவருக்கிருந்த நம்பிக்கையால், கெடுபிடியான காலங்களில்கூட தமிழ்த் தேசிய அரசியல் விலை போகாமல் பாதுகாக்கப்பட்டது. தொண்ணூறு வயதைக் கடந்திருந்தாலும் தீர்வைப் பெறவேண்டும் என்ற திடகாத்திரம் அவருக்கிருந்தது. இன்றுவரைக்கும் தீர்க்கப்படாதுள்ள தமிழ், முஸ்லிம் அபிப் பிராய பேதங்களைப் போக்குவதற்கு சம்பந்தன் போன்ற தலைமைகளே அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-56)

# சர்வதேசத்துடன் களமாடிய தீரர்

## சமத்துவக் கட்சி இரங்கல்

யாழ்ப்பாணம், ஜுலை 3

இனவாதக் கொந்தளிப்பினால் அழிந்து கொண்டிருக்கும் இலங்கைத் தீவை மீட்டெடுப்பதற்கு சமாதானமும் நீதியான முறையில் பல்லின சமத்துவமும் நிலைநிறுத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்திச் செயலாற்றிய மூத்த அரசியல் தலைவர் இரா. சம்பந்தன். அவரின் மறைவு நாட்டுக்குப் பேரிழப்பாகும்.

- இவ்வாறு சமத்துவக் கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இரா.சம்பந்தனின் மறைவுக்கு அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் நீதியான தீர்வொன்றை எட்ட வேண்டும் எனத் தன்னுடைய இறுதி மூச்சுவரையிலும் உறுதியாக இருந்தவர் சம்பந்தன். சமாதானத்திலும் ஐக்கியத்திலும் அமைதித்தீர்விலும் கொண்டிருந்த ஆர்வத்தைக் குறைத்ததில்லை. மாறிவரும் சர்வதேசச் சூழலையும் உள்நாட்டு நிலவரங்களையும் நன்றாக உணர்ந்தறிந்திருந்து அதன் வழியே தமிழ் மக்களுடைய அரசியலை முன்னெடுக்க முனைந்தவர் - என்றுள்ளது. (ச-214-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கடன் வாங்குவது வெற்றியா?

'கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள வெற்றி நாட்டுக்குக் கிடைத்த தனித்துவமான வெற்றி' என்று நாடாளுமன்றத்தில் உரையாற்றியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பெருமிதப்பட்டிருக்கின்றார். கடந்த இரண்டு வருடங்களாகத் தாம் அரசியலில் ஈடுபடவில்லை என்றும், நாட்டுக்காகவே தீர்மானங்கள் எடுக்கப்பட்டதேயன்றி, அதிகாரத்துக்காகவோ அல்லது பிரபல்யத்துக்காகவோ தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை என்றும் கூறியிருக்கின்றார். நாட்டில் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் ஆபத்பாந்தவராகத் தன்னைக் காட்டிக்கொண்டாலும் அவரின் செயற்பாடுகள் அவ்வாறிருக்கவில்லை. பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருந்த நாட்டை மீட்பதைக் காட்டிலும், அரசியலில் படுபாதாளத்தில் வீழ்ந்திருந்த தன்னுடையதும் - தன் கட்சியினதும் அரசியல் ஆதரவுத் தளத்தை மீட்டெடுப்பதிலேயே அவர் அதிக ஆர்வம் காட்டியிருந்தார். போர் வெற்றியின் மூலம் ஏற்பட்ட 'மவுசை' பயன்படுத்தி அதிகாரத்தை இறுகப் பற்றியிருந்த - அரசியலில் கோலோச்சிக்கொண்டிருந்த ராஜபக்சக்களை ஆட்டம் காண வைக்கும் நகர்வில் அவர் சிறிது வெற்றியும் பெற்றிருக்கின்றார்.

அதிகாரத்துக்கு வந்தது முதல் ரணில் விக்கிரமசிங்க தனது உரைகளில் 'நாட்டுக்காக' என்ற சொல்லாடலுடன் மக்கள் ஆதரவைத் தன்பக்கம் திருப்ப முயற்சித்தாலும் - நாட்டின் அனைத்துச் சிக்கலுக்கும் மூல காரணமான இனப்பிரச்சினைத் தீர்வு முதல் அனைத்து விடயங்களிலும் அவர் ஆக்கபூர்வமாக எதையும் மேற்கொண்டதாக இல்லை. வரிசையுகத்துக்கு முடிவுகட்டி நாட்டில் இயல்புநிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று ரணில் விக்கிரமசிங்க பீற்றிக்கொண்டாலும் - தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள இயல்பு நிலைமை தற்காலிகம் என்பதே நிபுணத்துவக் கணிப்பாகவிருக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்திடமும், சர்வதேச நாடுகளிடம் இருந்தும் பெற்றுக்கொண்ட கடன்களின் மூலமே இந்தத் தற்காலிக இயல்பு நிலைமை தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது. கடந்தகால அரசாங்கங்கள் செய்த தவறுகளே - நாட்டின் உற்பத்தி வருமானத்தை மேம்படுத்தாமல் கடன்மேல் கடன்வாங்கி அரசைக் கொண்டு நடத்தியதே நாடு இப்போது எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான காரணம் என்று சுட்டிக்காட்டப்படும் நிலையில், தற்போது ரணில் விக்கிரமசிங்கவும் அதே தவறையே செய்கின்றார். கடன்களின் மூலம் நாட்டின் இயல்புநிலைமை தோற்றுவிக்கப்பட்டாலும் நாட்டின் பொருளாதார நெருக்கடி இன்னமும் அதேகனதியுடன் புகைந்து கொண்டே இருக்கின்றது.

நாட்டின் அனைத்துச் சிக்கல்களும் இன்னமும் அப்படியேதான் இருக்கின்றன. சொல்லப்போனால் இனிவரும் காலங்களில் அவை அதிகம் பாதிப்புகளைச் சாதாரண மக்கள் தலையில் சுமத்தத்தான் போகின்றன. நாட்டுக்காக என்று ஆட்சிக் கதிரையைக் கைப்பற்றிக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க, உண்மையிலேயே நாட்டுக்காகச் சிந்தித்திருந்தால், நாட்டில் புரையோடிப்போய் - அனைத்துச் சிக்கலுக்கும் ஆணிவேராக இருக்கும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். நாட்டின் அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து நாட்டின் தேசிய உற்பத்தி வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்குரிய திட்டங்களைத் தீட்டியிருக்கவேண்டும். அவற்றையெல்லாம் தட்டிக் கழித்துவிட்டு - நாட்டின் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிட்டன என்ற மாயத்தோற்றத்தை ஏற்படுத்தி ஆதாயம்தேட முற்படக்கூடாது. சாதாரண மக்கள் தலையில் அதன் பாரத்தைச் சுமத்துவது இறுதியில் ஒட்டுமொத்த நாட்டையும் மீளமுடியா படுகுழியில் தள்ளும் என்பதே உண்மை.






# கட்டுமானத்துறைக்கு அரசாங்கம் புத்துயிர்!

கொழும்பு, ஜூலை 3

**இலங்கையில் நிர்மாணத்துறையைக் கட்டியெழுப்புவதற்கு 50 முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டதோடு, உடனடியாக நடைமுறைப்படுத்தக்கூடிய 14 விடயங்களில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.**

-இவ்வாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், கட்டுமான ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த முடியாத 200 பில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் கட்டுமானத்துறையின் பங்களிப்பு 8 -9 வீதமாகும். நிர்மாணத்துறையை ஊக்குவிக்கும் வகையில் புதிய கொள்கையொன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிர்மாண ஒப்பந்ததாரர்களை தாமதக் கட்டணம் அறவிடாமல் பதிவு செய்யும் பணியை நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

அதேவேளை நிர்மாணத்துறையில் 26 கைவினைப் பிரிவுகளின் கீழ் என்.வி.கியூ. தகைமைகளைக் கொண்ட திறமையான கைவினைஞர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் வேலைத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# தயாசிறி நீக்கம்; இடைக்காலத் தடை



கொழும்பு, ஜூலை 3

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமை மற்றும் செயலாளர் பதவியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவை நீக்குவதற்கு, கட்சி எடுத்த தீர்மானத்தை இடைநிறுத்தி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளில் இருந்து தன்னை நீக்குவதற்கு எதிராக தயாசிறி ஜயசேகர மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோருக்கு எதிராக தயாசிறி ஜயசேகர சமர்ப்பித்த இந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுக்கப்பட்டபோதே கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது. (ச-இ)

# இலங்கையில் இந்தியாவின் 'ஒக்ரேன் 100'

லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் நேற்றுமுதல் 'ஒக்ரேன் 100' பெற்றோலை தனது பல விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளது.

இதற்கான உத்தியோக பூர்வ அறிமுக நிகழ்வு எரிசக்தி அமைச்சர், இந்தியத் தூதுவர் தலைமையில் நடைபெற்றது. அதன்படி உலகில் இவ்வகை பெற்றோலை விற்பனை செய்யும் எட்டாவது நாடாக இலங்கை விளங்குகிறது.

நவீன வாகனங்களில் பயன்படுத்துவதற்கு உகந்த இவ்வகை எரிபொருளின் மூலம் அதிக தூரம், சீரான ஓட்டம் மற்றும் அதிக இயந்திர செயற்திறனை அனுபவிக்க முடியும் என்று லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# இந்தியாவுக்கு சஜித் பயணம்

கொழும்பு, ஜூலை 3

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விரைவில் இந்தியா செல்லவுள்ளார் எனத் தெரியவருகின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அவர் டில்லி செல்வார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிடம் இருந்து கிடைத்த அழைப்பையேற்று அவர் டில்லி செல்வார்.

தேர்தலுக்கு முன்னரே அவரின் பயணம் இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-44)

# ஓட்டோக்கட்டணம் குறைக்கப்படாது

பெற்றோலின் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் முச்சக்கர வண்டியின் பயணக் கட்டணம்குறைக்கப்படமாட்டாது என அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது. மாதத்துக்கு ஒரு முறை எரிபொருள் விலை திருத்தம் மேற்கொள்ளும்போது முச்சக்கரவண்டியின் பயணக் கட்டணத்தை ஒரே நேரத்தில் குறைக்கமுடியாது என்றும் அந்தச் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார். (ச)

## நாளை

04.07.2024

வியாழக்கிழமை

ஆனி - 20

சுபநேரம் : 07.27 - 08.57

ராகுகாலம் : 01.27 - 02.57

## நாளொரு நல்வார்த்தை

**அறியாமையுடன் ஒருவன் நூறு ஆண்டு வாழ்வதை விட, அறிவுடன் ஒரு நாள் வாழும் வாழ்க்கையே மேலானது.**

\- புத்தர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொழிற்றுறை பிரச்சினைகள் நிவர்த்திப்பதற்கு மன்றங்கள்

கொழும்பு, ஜூலை 3

தொழில் முயற்சியாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெறும் நோக்கில் யாழ்.மாவட்ட ரீதியாக தொழிற்றுறை மன்றங்களை உருவாக்குதல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக் கிழமை யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக் கும் பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்தப் பட்டன. (ச-66)

# கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஜூலை 3

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான விளக்கத்தை வழங்க வும் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு மான கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் முல் லைத்தீவு மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இரண்டு அமர்வுகளாக நடைபெற்றன.

கலந்துரையாடலில் ஜனாதிபதியின் மேலதிக செய லாளர் ரஞ்சித் ஆரியரட்ண, உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செய லகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவன்ஸ, செயலகத்தின் கொள்கைப்பிரிவுத் தலைவர் கலாநிதி சி.வை.தங்கராசா, செயலகத் தின் ஏனைய அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-25-19)





கோண்டாவிலைச் சேர்ந்த கனடாவில் வாழும் செந்தில்குமரன் தம்பதியரின் திருமண நாளை முன்னிட்டு அவர்களின் நிதிப்பங்களிப்பில் , கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநா யகர் சனசமூக நிலையத்தினதும், குமரன் விளை யாட்டுக் கழகத்தினதும், உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தினூடாக, கல்லுண்டாய் ஐக்கிய சன சமூக நிலையத்துக்கு 20 ஆயிரம் ரூபா பெறும தியான விளையாட்டு உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. (ச-22,66)



# உதைபந்தாட்டப் போட்டி ஹென்றியரசர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 3

வலிகாமம் கல்வி வலயமட்ட பாடசாலைகளுக்கு இடை யிலான பெரு விளையாட்டுக்கள் வரிசையில் மகாஜ னக் கல்லூரியில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் முத லாம் இடம்பெற்று புனித ஹென்றியரசர் கல்லூரி சம்பியன் பெற்றுக்கொண்டது.

இரண்டாம் இடத்தை ஸ்கந்தவரோதயக்கல்லூரி யும்,மூன்றாம் இடத்தை மகாஜனக் கல்லூரியும்,நான் காம் இடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரியும் பெற் றுக் கொண்டன. (ச-555)



# நிரந்தர நியமனம் வழங்க ஊழியர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 3

கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலை யத்தில் ஒப்பந்தத் தொழிலாளிகளாகக் கடமை யாற்றும் 23 ஊழியர்கள், தமக்கான நிரந்தர நிய மனத்தைப் பெற்றுத்தரவேண்டும் என்று நாடா ளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம், நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்துக்குச் சென்ற அவர்கள், உள்ளூ ராட்சிமன்றங்களில் ஒப்பந்தப் பணியாளர்களாகக் கடமையாற்றியோரின் நிரந்தர நியமனம் தொடர் பில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து தாம் அறிந்துகொண்டதாகவும், அதேபோன்று தமது நியமனம் தொடர்பிலும் உரிய நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டுமெனக்கோரி எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றை வழங்கி யுள்ளனர். (ப-113-66)



ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள் குருபூஜை விழா, சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு நாகதம்பி ரான் ஆலய பிரதான மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. சிவநெறிப் பிரகாசர் , சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத் தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற விழாவில் ஆன்மீக விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பித்தார். (25)

# சமூக அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு சீனாவின் புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம், ஜூலை 3

நல்லூர்ப் பிரதேச செயலக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்மினி ரஜீவன் மத்திய சமூக சேவைகள் திணைக்களத்தின் புலமைப் பரி சிலைப் பெற்றுள்ளார். தற்போது அவர் சீனாவின் தலைநகர் பீஜிங்கில் இடம்பெற்று வரும், வளரும் நாடுகளுக்குச் சமூக வளர்ச்சி மற்றும் வறுமை குறைப்புத் தொடர்பான அனுபவப் பகிர்வுப் பயிற்சி நெறியில் பங்கேற்றுள்ளார். (25-66)



தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில், சாவகச்சேரி இந்துக் கல்லூரி யில் புத்தக அரங்கவிழா நிகழ்வுகள் அண் மையில் நடைபெற்றன. (ப)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான முடிவெடுத்து மாணவியொருவர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 3

16 வயது மாணவியொருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், சடலத்தை மீட்டு, உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். (ம-20)

# லிட்ரோ எரிவாயு விலை குறைப்பு

கொழும்பு, ஜூலை 3

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை நேற்றுச் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 100 ரூபாவால் குறைக்கப்பட்டு 3 ஆயிரத்து 690 ரூபாவாகவும், 5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 40 ரூபாவால் குறைக்கப்பட்டு ஆயிரத்து 482 ரூபாவாகவும், 2.3 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 18 ரூபாவால் குறைக்கப்பட்டு 694 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது.

இதேவேளை - லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலைகளில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-66)






# யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளரை வெளியேற்றுமாறுகோரி யாழில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணக் கல்விவலயப் பணிமனையில் காணப்பட்ட சைவக்கடவுள்களின்திருவுருவப் படங்களை அகற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர் பிறட்லீயை உடனடியாக யாழ்ப்பாணக் கல்வி வலயத்திலிருந்து வெளியேற்றுமாறு கோரியும், அவரது மதவெறிச் செயற்பாட்டை வன்மையாகக்கண்டித்தும் இலங்கை சிவசேனை அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண வலயத்தின் புதிய கல்விப் பணிப்பாளராகக் கடந்த வாரம் பொறுப்பேற்றவுடனேயே வலயக் கல்விப் பணிமனையில் காணப்பட்ட சைவக்கடவுள்களின் திருவுருவப்படங்களை வலயக் கல்விப் பணிப்பாளர் பிறட்லீ அகற்றியிருந்தார்.

குறித்த சம்பவம் வலயக் கல்விப் பணிமனையில் கடமையாற்றிய இந்துசமய உத்தியோகத்தர்கள், சமய, சமூக ஆர்வலர்கள் மத்தியிலும் கடும் அதிருப்தி நிலையைத் தோற்றுவித்திருந்தது. இதுதொடர்பாக உடனடியாகக் கவனம் செலுத்திய வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கடவுள்களின் படங்களை மீள உரிய இடங்களில் வைக்குமாறு உத்தரவிட்டார். இந்நிலையிலேயே நேற்றையதினம் குறித்த செயற்பாட்டைக் கண்டித்துப் பல்வேறு பதாகைகளைத் தாங்கியாழில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட மதவாத சிந்தனையுடைய ஒருவரால் நேர்மையானதொரு சேவையினை யாழ். கல்விப் புலத்திற்கு வழங்க முடியாது என்பது தெளிவாகவே புலப்படுகிறது. இவரினால் இந்து மாணவர்கள், இந்து ஆசிரியர்கள், இந்துப் பாடசாலைகள் எனப் பலதரப்பினரும் பலவகையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகளவிலேயே உள்ளது. அவரது மதவாத மனநிலை சார்ந்து தீவிர விசாரணையும், இடமாற்றத்துடன் கூடிய தகுந்த தண்டனையும் வழங்கப்படவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள். (ம-20-66)

# சம்பந்தனின் இடத்துக்கு குகதாசன் நியமனம்

## வர்த்தமானி வெளியானது



கொழும்பு, ஜூலை 3

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சம்பந்தன் மறைந்ததையடுத்து, அவருடைய இடத்துக்கு சண்முகம் குகதாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கொழும்பில் காலமானார். அவரது மறைவால் நாடாளுமன்ற ஆசனத்தில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளது. அந்த வெற்றிடத்துக்கே சண்முகம் குகதாசன் நியமிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (ம-26-66)

# ஹெரோய்னுடன் பெண் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 4

ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


யாழ்ப்பாணம் - கல்வியங்காட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே விசேட அதிரடிப் படையினரால் மேற்படி பெண் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து ஒரு கிராம் 270 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் கோப்பாய் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-125)

# முத்திரை வெளியீடு

மன்னார், ஜூலை 3

மருதமடு அன்னைக்கு முடிசூட்டியதன் நூற்றாண்டு விழா ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு நிகழ்வு மடுத் திருத்தலத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. (ம-25-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மடு அன்னைக்கு நேற்றுத் திருவிழா

## இலட்சக்கணக்கில் பக்தர்கள் திரண்டனர்

மன்னார், ஜூலை 3

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் மடுத்திருத்தலத்தின் ஆடிப் பெருவிழா, மடு அன்னைக்கு முடிசூட்டப்பட்ட நூற்றாண்டு விழாவாகவும் நேற்று இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் மடு பரிபாலகர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளாரின் ஏற்பாட்டில் இவ்விழா நடைபெற்றது.

திருவிழாவின் கூட்டுத்திருப்பலியை, கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை ஆகியோர் இணைந்து ஒப்புக்கொடுத்தனர்.

திருப்பலியின் நிறைவில் மடு அன்னைக்கு முடி சூட்டப்பட்டதின் நூற்றாண்டை முன்னிட்டு மடு அன்னையின் திருச்சொரூபத்தின் தலையின் மேலுள்ள கீரிடத்தின் மேல் சிறிய முடி ஒன்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையால் சூடப்பட்டது. இலட்சக்கணக்கான பக்தர்கள் விழாவில் கலந்துகொண்டனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு மடு அன்னைக்கு முடி சூட்டப்பட்டதின் நினைவாக முத்திரை வெளியீடு செய்யப்பட்டது. அன்றைய தினம் இரவு 8.30 மணிக்கு யூபிலி நினைவு மலர் வெளியீடு செய்யப்பட்டது. இதன் முதற் பிரதியை பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மன்னார் ஆயரிடமிருந்து பெற்றுக்கொண்டார். (ம-26-56-60)

## கசிப்புடன் மூதாட்டி கைது

கசிப்புடன் வயோதிப பெண் ஒருவர் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். ஆனைக்கோட்டை சாவற்கட்டுப் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 72 வயதான பெண் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டது. சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகப்பொலிஸார் தெரிவித்தனர். (ச–125)

## பொதுக் கூட்டமும் சீருடை வழங்கலும்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்.மல்லாகம் மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டமும் சீருடை மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் அதிபர் சி.கணேசராசா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி மேசி சேவியர் பிரதம விருந்தினராகவும், மல்லாகம் மக்கள் மன்றத்தின் கனடாக் கிளையைச் சேர்ந்த கருணாகரன் கஜகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25-66)


**Room வாடகைக்கு**

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி Lane ல் (Science World பின்புறமாக) அமைந்துள்ள வீட்டில் பெண்கள் தங்குமிட வசதி கொண்ட அறை ஒன்று வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 199 5703


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 03 - 1925



மறைவு 03 - 07 - 2018

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மற்றும் அன்னசத்திர ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

**வேலுப்பிள்ளை செல்லத்துரை**

அவர்கள்


எமது குடும்பத்தலைவர் எம்மைவிட்டுப் பிரிந்து ஐந்து ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் அவரின் நினைவுகள் என்றும் நீங்காமல் எமது நெஞ்சங்களில் நிழலாடிக்கொண்டே இருக்கின்றன.

குடும்பத்தலைவரின் சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 - 02 - 1936



மறைவு 01 - 07 - 2024

**ஆறுமுகம் பாலச்சந்திரன்**

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், தற்போது இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பாலச்சந்திரன் நேற்று முன்தினம் (01.07.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சொர்ணம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - இராசம்மாவின் அன்பு மருமகனும், காலம் சென்ற பாலச்சந்திரன் தனலட்சுமியின் அன்புக் கணவரும், ரமேஷ் (Director Ecosteem.Pvt.Ltd), ராகுலன் (Cheif Instructor - Postal Training Institute Jaffna), ரகுபன் (France) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரதிப்பிரியா (Director Ecosteem Pvt Ltd), விஜிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் வடமாகாணம்), சுந்தரி ஆகியோரின் மாமனாரும், சாகித்யன் (St.John's College Jaffna), சாகித்யா (J/Vembadi Girls College), சதுர்சன் (Jaffna Central College), சயுர்சன் (Jaffna Central College), ருத்விகன், சர்வசிவான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :-

ரமேஷ் - 071 454 6810

பிரியா - 071 454 6814

ராகுலன் - 077 724 0382

தகவல்:

**குடும்பத்தினர்.**

(CS/55567) J-1

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

காயம் தான்
உங்களுக்குள்
ஒளி
நுழையும் இடம்
– ரூமி

# தகிக்கும் தண்ணீர்!

கிறிஸ்ரின் டிஷானி கிறிஸ்தோபர்


அண்மைக்காலங்களில் உலகளாவிய பேசுபொருளாக இருப்பது நீருக்கான கேள்வியும் அதனை ஈடுசெய்ய இயலாப் பற்றாக்குறையுமேயாகும். புவி வெப்பமயமாதல், எல்நினோவின் தாக்கம் இவை அனைத்தும் ஒன்றுசேர்ந்து நிலைமையை மேலும் மோசமாக்கியிருக்கின்றன. 2025ஆம் ஆண்டுக்குள் உலக மக்கள் தொகையில் அரைவாசிக்கு மேலானோர் நீரை அடிப்படையாகக்கொண்ட பலவீனங்களுக்கு உட்படுத்தப்படுவர் என சில ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர். பல்வேறு வேதியற் பொருள்களின் கரைப்பானாகவும் தொழிற்சாலைகளில் குளிர்ப்பி மற்றும் கடத்தியாகப் பயன்படுத்தப்படுவதாலும் உலக வர்த்தகத்தில் நீர் முக்கியமான பங்காற்றுகிறது. அண்ணளவாக 70 சதவீத நன்னீர் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இத்தகைய முக்கியத்துவம் பெற்ற நீர்வளம் தொடர்பில் வளர்முக நாடுகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றன. அவற்றில் பிரதானமானது குடிநீர்ப் பற்றாக்குறை, நீர் மற்றும் சுகாதார வசதிகளை அடைவதற்கான சீரற்ற உட்கட்டமைப்பு, நீர் மாசடைவு மற்றும் குறைநிலையிலான நீர் பாதுகாப்பு நடைமுறைகள் என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. வளர்முகநாடுகளில் ஏற்படுகின்ற நோய்களில் ஏறக்குறைய 80 வீதமானவை நீரின் மிகக்குறைந்த தரம் மற்றும் நீர் சார்ந்த ஏனைய பிரச்சினைகளால் ஏற்படுகின்றன. அவை மலேரியா, டயரியா, கொலரா போன்ற இறப்பினை ஏற்படுத்தக்கூடிய உடல் நிலைகளை உருவாக்கி வருகின்றன. ஏறக்குறைய 1.5 மில்லியன் சிறுவர்கள் மேற்படி நோய்களால் ஒவ்வொரு வருடமும் இறப்பினைத் தழுவுவதாக குறிப்பிடப்படுகிறது. இவற்றில் பெரும்பாலானோர் 5 வயதுக்குட்பட்டவர்கள்; என்பது குறிப்பிடத்தக்கது.

## தண்ணீர் பற்றாக்குறை

தண்ணீர் பற்றாக்குறை என்பது ஒரு பகுதியில் தண்ணீர் பயன்பாட்டுக் கோரிக்கைகளைச் சந்திக்கப் போதுமான நீர் வளங்கள் இல்லாமையாகும். அதாவது நியமமான நீர் கேள்விகளை நிறைவேற்றக்கூடியளவிலான நன்னீர் வளங்களினுடைய குறைவுபாடு என விவரிக்கப்படுகிறது. தற்போது இது அனைத்து கண்டங்களையும் பாதிக்கிறது. உலகம் முழுவதும் 2.8 பில்லியன் மக்களுக்கு குறைந்தது ஒரு மாதத்துக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. 1.2 பில்லியன் மக்களுக்கு சுத்தமான குடிநீர் இல்லை. தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள பிரதேசங்களில் 2025 ஆம் ஆண்டில் 180 கோடி மக்கள் வசிப்பார்கள் என ஐ.நா. சபை அறிவித்திருக்கிறது.

பெரும்பாலும் வரண்ட பகுதிகள் குறிப்பாக மத்திய ஆசியா, மேற்காசியா, வட ஆபிரிக்கா மற்றும் ஆபிரிக்காவின் உப சகாராப்பகுதிகள் கடும் நீர் நெருக்கடியினை எதிர்கொண்டு வருகின்றன. பூகோள ரீதியில் ஆண்டிற்குரிய சராசரித் தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் போதுமானளவு நன்னீர் காணப்படுகின்ற போதும் மக்களுக்குத் தேவைப்படுகின்ற காலப்பகுதியும் தேவைப்படும் இடத்துக்கும் நீர் கிடைக்கக்கூடியதாயுள்ள பொருத்தப்பாடு இன்மையே நீர் நெருக்கடி தோன்றுவதற்குக் காரணமாகும். ஆண்டில் ஒரு மாதத்துக்கேனும் 4 பில்லியன் மக்கள் கடுமையான நீர் நெருக்கடியினை எதிர்கொள்வதோடு உலகின் அரைவாசிக்கும் மேற்பட்ட பெரிய நகரங்களும் குறித்த நீர் நெருக்கடியினை எதிர்கொண்டு வருகின்றனர்.



## நீர்மாசடைதல்

அடுத்து நீர்வளத்தின் இருப்பினை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் பிரதான பிரச்சினையாக நீர் மாசடைதல் காணப்படுகிறது. நீரானது அதன் பௌதீக, இரசாயன, உயிரியல் அம்சங்களில் மாற்றமடைகின்றபோது நீர் மாசடைதல் எனப்படுகிறது. அதாவது ஏரிகள், ஆறுகள், கடல்கள், நிலக்கீழ்நீர் முதலிய நீர் நிலைகளில் காணப்படும் நீர் மனித நடவடிக்கைகளால் அதன் தூய்மையை இழந்து குறிப்பிட்ட பிரதேச சூழல்தொகுதியின் பயன்பாட்டிற்கு உதவாத முறையில் மாற்றமடைகின்ற தன்மையினை நீர் மாசடைதல் எனக்குறிப்பிடலாம்.

இயற்கை நிகழ்வுகளான எரிமலை வெடிப்பு, அல்காப் பெருக்கம், புயல், நிலநடுக்கம், வரட்சி போன்றவையும் நீரின் தரத்திலும் அதன் சூழலியல் நிலைமையிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இருந்தபோதிலும் மிக அதிகளவான மனிதச் செயற்பாடுகளினால் அந்நீர் தூய்மைகெட்டு மனிதப் பயன்பாட்டிற்கும் உயிரினங்களின் வாழ்வுக்கும் உதவாமல் போகும் நிலை நீர்மாசடைதலினால் ஏற்படுகிறது. அந்தவகையில் விவசாய நடவடிக்கைகளாலும் பல்வேறு விதத்தில் நீர் மாசாக்கம் அடைகிறது. விவசாய நிலங்களில் கிருமிநாசினிகள், பீடை நாசினிகள் மற்றும் இரசாயன உரங்கள் என்பவற்றின் பயன்பாடு அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வாறு பயன்படுத்தப்பட்ட நிலத்தினூடாக நீரானது வெள்ளக் காலங்களில் பாய்ந்து செல்லும்போதோ அல்லது நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கூடாக ஆறுகளில் இந்த நீர் கலக்கின்ற போதோ அத்தகைய மாசுக்களை கழுவிச் சேர்த்த வண்ணமே நகர்கிறது. மேலும் இரசாயன கிருமிநாசினி, பீடை நாசினி என்பவற்றின் கொள்கலன்கள் அருகிலுள்ள நீர் நிலைகளில் விடப்படுகின்றபோதும் நீர் மாசடைகின்றது. வளர்முக நாடுகளைப் பொறுத்தவரை விவசாய நடவடிக்கைகளில் அதிகளவில் ஈடுபடுவதனால் இத்தகைய மாசாக்கம் அதிகளவில் இடம்பெறுகிறது.

## நீர்ப்பாதுகாப்பு

நீர்ப்பாதுகாப்பு என்பது நீரின் இயற்கை வளத்தை நிலையான முறையில் நிர்வகிப்பதற்கும் நீர்க்கோளத்தை பாதுகாப்பதற்கும் தற்போதைய மற்றும் எதிர்கால மனித சமுதாயத்திற்கான நீர் பற்றாக்குறையை ஒழித்து அவர்களுக்கான நீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் அவசியமான அனைத்துக் கொள்கைகள், உத்திகள் மற்றும் செயற்பாடுகளை உள்ளடக்கிய நடவடிக்கைகளைக் குறிக்கிறது. மக்கள்தொகை, குடும்பத்தின் அளவு மற்றும் வளர்ச்சி ஆகிய அனைத்துக் காரணிகளும் தண்ணீரின் பயன்பாட்டு அளவை பாதிக்கின்றன. காலநிலை மாற்றம் போன்ற காரணிகள் இயற்கையான நீர் ஆதாரங்களில் குறிப்பாக உற்பத்தி மற்றும் விவசாய நீர்ப்பாசன நடவடிக்கையில் அழுத்தத்தை அதிகரித்துள்ளன. பல நாடுகள் ஏற்கனவே தண்ணீர் பாதுகாப்பை இலக்காகக்கொண்ட கொள்கைகளை வகுத்தும் செயற்படுத்தியும் வெற்றி பெற்றுள்ளன.

தண்ணீரைப் பாதுகாப்பதற்கான முக்கியமான சில நடவடிக்கைகளாக நீரிழப்பை ஏற்படுத்துதல், நீர்ப்பயன்பாடு மற்றும் நீர் வளங்களை வீணாக்குதல் போன்ற நடவடிக்கைகளை இயலுமான அளவுக்குக் குறைத்தல், நீரின் தரத்துக்கு ஏதேனும் சேதம் ஏற்படுவதை தவிர்ப்பது மேலும் நீரின் பயன்பாட்டைக் குறைக்கும் அல்லது மேம்படுத்தும் நீர் மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்துதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். நீரைப் பாதுகாப்பதன் பிரதான நோக்கம் மனிதன் மற்றும் சூழல்தொகுதிக்கு அதிகளவாக நீரின் நன்மைகளை பெறச்செய்வதேயாகும்.

இலங்கையைப் பொறுத்த வரை நீர் தொடர்பிலான பிரதான பிரச்சினையாக மானிடவியல் நடவடிக்கைகள் உள்ளூர் கழிவுகள், கைத்தொழில் கழிவுகளால் நகரங்களின் உள்நாட்டு மேற்பரப்பு நீர்நிலைகளின் கடுமையான மாசடைவு மற்றும் கிராமங்களின் விவசாய நடவடிக்கைகளால் வெளியேற்றப்படும் கழிவுநீர் ஆகிய காரணங்களால் நீர் குறைவு மற்றும் நீர் தரமிழப்பு என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் குழாய்க் கிணறுகளின் மிகைப்பயன்பாடு இலங்கையின் தரைக்கீழ் நீர்வளத்தைப் பாதிக்கின்ற மற்றுமொரு காரணியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எண்ணெய்க் கசிவுகள் கப்பல்களின் கழிவுகளை கடலில் கொட்டுதல், பவளப்பாறை மற்றும் மண் அகழ்வு ஆகியன கடற்சூழல் மாசடைவுக்குக் காரணங்களாகின்றன.

இயற்கை அன்னை வழங்கிய பெறுமதிமிகு கொடையாகிய தண்ணீர் வாழ்க்கைக்கும் அதனோடு இணைந்த சூழல் தொகுதியின் செயற்பாட்டும் இவ்வுலகின் நிலைத்திருப்புக்கும் இன்றியமையாததாகும். எனவே அதிகரித்து வரும் சனத்தொகைக்கேற்ப நீரிற்கான கேள்வியும் அதிகரித்து வரும் நிலையில் இருக்கின்ற நீர் இருப்பின் பெறுமதியினை உணர்ந்து வீண் விரயங்களைத் தவிர்த்து வினைத்திறனாக பயன்படுத்துவதனூடாகவும் ஒவ்வொரு நாடுகளும் நீர் தொடர்பான திட்டங்களையும் முறையான சட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டலுடன் உரிய நீர்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதனூடாக தண்ணீர் பஞ்சம் என்றதொரு அச்சுறுத்தலிலிருந்து மீண்டெழ சிந்திப்பது காலத்தின் கட்டாயமன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.எம்.பஞ்சாபிகேசன்

## நாதஸ்வரத்தை பேறாக்கிய இசைமேதை



நாதஸ்வரக் கலைஞர் அமரர் கே.எம். பஞ்சாபிகேசனின் நூறாவது பிறந்த தினம், கடந்த முதலாம் திகதி கொண்டாடப்பட்டது. அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

■ ஐ.கிருஷ்ணன்

மனித வாழ்வில் ஒவ்வொரு துறையிலும் புகழ்பெற்ற விற்பன்னர்களாகத் திகழ்ந்து மறைந்தவர்கள் பலருண்டு அவர்களில் மக்கள் மனதில் நிற்கக் கூடியவர்கள் ஒரு சிலரே. அந்த வரிசையில் தனது நாதஸ்வர இசைக் கலைமூலம் அனைத்து மனங்களையும் கவர்ந்த சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த க.மு.பஞ்சாபிகேசனின் கலைச்சேவையை மதித்து அவரின் இசையால் கவரப்பட்ட மக்கள் அவரது நூறாவது பிறந்தநாளை கொண்டாட விழா எடுத்திருப்பதன்மூலம் பஞ்சாபிகேசனின் கலைச்சேவையை இன்றும் மக்கள் மதிக்கிறார்கள் என்பது நிதர்சனமாகிறது.

நாதஸ்வர இசைக்கலையில் கீர்த்தனைகள் ஆலாபனைகள் வாசித்த கலைஞர்களிடையே, பல நாதஸ்வர இசைக்கலைஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்களில் குடும்பிக் கலைஞர் என்று அழைக்கப்படும் அமரர் க.மு.பஞ்சாபிகேசனும் ஒருவர்.

சாவகச்சேரி சங்கத்தானையில் 1924 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் திகதி நாதஸ்வர இசைக்கலைஞர் க.முருகப்பா தம்பதியின் மகனாக பிறந்த பஞ்சாபிகேசன், சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்விகற்ற வேளையில் தனது 14ஆவது வயதில் தனது தந்தையுடன் இணைந்து பருத்தித்துறை கோவிலில் தனது பணியை ஆரம்பித்து சுமார் 70 வருடங்களாக இசைப் பணியைத் தொடர்ந்தார்.

தனது இசைச்சேவையை இலங்கையில் உள்ள கோவில்கள் மட்டுமன்றி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பாங்கொக், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் மேற்கொண்டுள்ளார்.

இவரது கலைப்பணிக்கு மதிப்பளித்து பல்வேறு அமைப்புகள் பட்டங்களை வழங்கியுள்ளன. அவற்றுள் யாழ். பல்கலைக்கழகத்தின் உயரிய விருதான கௌரவ கலாநிதிப் பட்டம், 2010ஆம் ஆண்டு அவருக்கு வழங்கப்பட்டது. அத்துடன், மன்னார் திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானத்தினர் இசைவள்ளல் மற்றும் நாதஸ்வர கலாமணி பட்டத்தையும், முன்னாள் கல்வி அமைச்சர் பதியுதீன் முகமது நாதஸ்வர கானவாருதி என்னும் பட்டத்தையும், அகில இலங்கை கம்பன் கழகத்தினர் இசைப் பேரறிஞர் பட்டத்தையும் இசை மேதை கே.எம்.பஞ்சாபிகேசனுக்கு வழங்கியுள்ளனர். மட்டுமல்லாமல், கலாசார அமைச்சால் கலாபூஷணம் விருதும், வடக்கு கிழக்கு மாகாண அரசால் கௌரவ ஆளுநர் விருதும், முன்னாள் இந்து சமய கலாசார அமைச்சர் செ.இராசதுரையால் ஸ்வரஞானதிலகம் பட்டமும், சாவகச்சேரி இசை ரசிகர்கள் நாதஸ்வர இசை மேதை பட்டமும், தென்மராட்சி இலக்கிய மன்றத்தினர் நாதஸ்வர சிரோன்மணி விருதும் யாழ்ப்பாணம் இந்து கலாசார மன்றத்தால் சிவகலாபூஷணம் விருதும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானத்தில் 40 வருடங்களாகவும், வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் கோவிலில் நீண்டகாலமும் ஆஸ்தான கலைஞராக பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கோகிலமணி ஜெகானந்தராஜா

## அரியாலை தந்த இசைக்குயில்

■ கே.எஸ்.சிவஞானராஜா

கந்தபுராணக் கலாசார நுழைவாயிலெனப் போற்றப்படும் திருவருள் பூக்கும் அரியாலை மகிழ்ந்த இசைக்குயிலே திருமதி கோகிலமணி ஜெகானந்தராஜா ஆவார்.

கலைகளைப் பேறாக்கிய தலைமைக் கிராமங்களான இணுவில், அளவெட்டி போன்று அரியாலையும் ஆய கலைகளின் சீதனமாகும். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று யாழ். பல்கலைக்கழக நுண்கலைக் கழகத்தில் சங்கீதத்தினை செவ்வன கற்று 1984 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் நியமனம் கிடைத்ததும் 1991இல் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்று மொத்தமாக இருபத்தெட்டு வருடங்கள் அல்லும் பகலும் அயராது மாணவ இரத்தினங்களுக்குச் சங்கீதக் கருவூலங்களை இங்கிதமாக இனிக்க ஊட்டிய தாயவளாக கோகிலமணி ஜெகானந்தராஜா மிளிர்ந்தார்.

சங்கீதம் என்பது சாகித்தியபாவம் கொண்டது. சர்வ வல்லமை கொண்டது. சரீர, சாரீர, சாமானிய, சகவாழ்வுக்கு ஆதாரமானது. சச்சரவுகளையும், சமூக ஒவ்வாமைகளையும், சமியாத கருத்துகளையும் அகற்ற வல்லது இவ்வளவு வல்லமைகளையும் கோகிலமணி என்னும் இசைக்குயில் மாணவர்களின் வாயிலே பையப்பையத் தீத்திய பைங்கிளியாகத் திகழ்ந்தார். சங்கீதம், பண்ணிசை, பாவோதல், நாட்டார்பாடல், புராணபடனம், கந்தாப்பிரசங்கம், மனனம், பஜன், பக்திப்பாடல், அபிநயப்பாடல், வில்லுப்பாட்டு, ஆகிய சகல துறைகளிலும் தோய்ந்த ஒரு சகலகலா வல்லியாகப் பாடசாலைச் சமூகத்திலேயும் தனிப்பட்ட குடும்ப, கிராம மட்டத்திலேயும் தன்னைப் பொதுநலப் பேறுகளுக்காக கடுமையாக அர்ப்பணித்து உழைத்தார்.

அரியாலையில் யாவருமறிந்த இசையுலகில் கல்பித மனோதர்ம கலைவாணியாகி, ஜனரஞ்சக பாலினியாக இலங்கியவர் அமரர் கோகிலமணி ஜெகானந்தராஜா ஆவார்.

இன, மத, மொழி, குல பேதங்களைக் கடந்து இசையைப் பொதுமொழியாக்கிய பெருந்தகைக்கு கலாபூஷணம் ஸ்ரீ வனிதாபிமான விருது, இசைஞான திலகம், கலைமாமணி, கலைஞானச்சுடர், ஆகிய பட்டங்கள் அலங்காரமாகி ஆளுமை தந்தன. நிறைவாக அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆனவள், தன் பாதார விந்தங்களில் கோகிலமணியின் கானரீங்காரம் நீண்டொலிக்கும்படியாக பெப்ரவரி மாதம் 20ஆம் திகதியன்று அரவணைத்துப் புதுமை கொண்டாள்.

## உன் அண்மைக்கு...

கயூரி புவிராசா

வசந்த கால பூ உதிர்வுகளை
பொறுக்கும் இந்த அந்திக்கு
எத்தனை கருணை
தன் சாரலில் நனையும்
குழந்தைமைகளை கண்டு
குளிரும் மழைக்கு எத்தனை
பெரும் மனது
காலத்தின் திசைகளில் நீ குறித்த
நினைவின் பவித்திரங்கள்
இந்த ப்ரியத்தின் கனம்
உன் அண்மைக்கு தான்
தவித்துக்கிடக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரலிங்கம் தியாகலிங்கம்


**வடகிழக்கு மாகாணத்தில் தலைமைச் செயலாளராக இருந்து, மாகாணத்தின் மேன்மைக்கு அளப்பெரும் சேவையாற்றிய அமரர் சிவகுருநாதன் ரங்கராஜாவின் சிரார்த்ததினம் ஜுலை முதலாம் திகதியாகும். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

# சிவகுருநாதன் ரங்கராஜா

## வடகிழக்கு மாகாணத்தின் மேம்பாட்டுக்கு அல்லும் பகலும் தன்னை அர்ப்பணித்தவர்

மாகாணசபையின் உருவாக்கம் எமது நாட்டில் சீர்தூக்கிப் பார்க்கவேண்டியதாக உள்ளது. அதன் தோற்றப்பாடும், அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்புகளின் போதாமையும் பேசப்படுகின்ற தருணத்தில் வடகிழக்கு மாகாணத்தில் தலைமைச் செயலாளராக இருந்து சேவையாற்றிய அமரர் சிவகுருநாதன் ரங்கராஜாவின் பணிகளையும், அனுபவங்களையும் மீள்நோக்கிப் பார்ப்பதும், அவரை முன்னுதாரணமாகக் கொள்வதும் இன்று தவிர்க்கப்படமுடியாத ஒன்றாகும்.

பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலய சூழலில் உருவாகி, உயர்ந்து பல பதவிகள் வகித்து வந்த அந்தப் பெருந்தகை வடமாகாண தலைமைச் செயலராக இறுதியாக இருந்து ஓய்வுபெற்றார். ஒருங்கிணைந்த வடகிழக்கு மாகாணசபையின் தலைமைச் செயலாளராக செயலாற்றிய செயல்வீரர். நிர்வாகச்சிக்கல், இன முரண்பாடுகள், பிரதேச வாதம், மதவாதம் எனும் பிரச்சினைகள் எதுவுமே தலை தூக்காதவாறு மிகவும் சாதுரியமாக கடமையைக் கையாண்டவர். அந்தச் சபையின் கடைசி தலைமைச் செயலாளராகவும் வடமாகாணத்தின் முதலாவது தலைமைச் செயலாளராகவும் இருந்து இவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. விதந்து போற்றுதற்குரியன.



### ஆளுமையாளனின் பணிகள்

கனல் மிக்க யுத்தம் நிகழ்ந்த காலத்திலும் சகல இன மக்களினதும் நன்மதிப்பும் அன்பையும் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் துன்புற்ற மக்கள் சார்பாக செயற்பட்டவர். இயற்கை அனர்த்தங்களாக 1978ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் அழிவுகளையும் 2004ஆம் ஆண்டில் வட கிழக்கில் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட சுனாமி அழிவுகளையும் மற்றும் காலத்துக்குக் காலம் வெள்ளப்பெருக்கு, வரட்சியால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளில் துயர் துடைப்பதிலும் புதுவாழ்வு கொடுப்பதிலும் மீள மக்கள் எழுச்சிபெறுவதிலும் பெரும் பணியாற்றியவர். உள்நாட்டு யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்களின் நலம் பேணுவதிலும் மீள்குடியேற்றங்கள் செய்வதிலும் பாதிக்கப்பட்ட மக்களின் உணவு, பாதுகாப்பு, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் நிலைபேறான வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதிலும் நீண்டகாலமாகச் செயற்பட்ட கர்ம வீரர் எனலாம். புன்முறுவல் பூத்த முகமும் மற்றவரை மதிக்கும் பாங்கும் இக்கட்டான நிலையிலும் மாறா உடன்பாட்டுச் சிந்தனையும் அவரது நிரந்தரப் பண்புகள். அத்துடன், ஆன்மீகத்திலும் தீராத ஈடுபாடு கொண்டிருந்தார். ஆன்மீகத் துறையில் அலுவலர்களை நல்வழியில் நடத்தினார். திருகோணமலை வரோதய நகரில் அமைந்துள்ள சிவாலயத்தினைப் புனருத்தாரணம் செய்ததோடு அங்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பூசை வழிபாடுகளோடு அன்னதானம் செய்யும் பொறுப்பினையும் ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் வழங்கி சிறப்பாக மேற்கொண்டார். தற்போதும் அது தொடர்ந்து நடைபெற்றுவருவதையும் அவற்றில் அலுவலர்கள் கலந்து கொண்டதையும் இன்றைய அதிகாரிகள் நினைவு கூருகிறார்கள். பணித்தொகுதியினரையும் வட மாகாணத்தையும் மேன்மையுறச் செய்த பெருமகன் இவ்வுலகை விட்டு நீங்கிச் சென்றாலும் அவரின் பாதச்சுவடு வட மாகாணத்தை முன்னோக்கிக் கொண்டு செல்லவேண்டும். ஜனநாயகத்தின் கூறுகளாக பிரதிநிதித்துவ ஜனநாயகம், பங்கேற்பு ஜனநாயகம் என்பன அமையும் என்பர். சிறந்த ஜனநாயகச் செயற்பாடு என்பது தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படுகின்ற பிரதிநிதிகளோடு மட்டுப்படாமல் நிர்வாக அதிகாரிகள் பங்கேற்பு ஜனநாயகத்தினை செயற்படுத்துபவர்களாக இருக்கவேண்டும். அவ்வகையில் ரங்கராஜா சிறந்த முன்னுதாரணம் மிக்கவர். அவரைப் பின்பற்றி நிர்வாக அதிகாரிகள் மக்கள் நலனை முன்னுதாரணமாகக் கொண்டு கடமையாற்ற வேண்டும்.

### தூரநோக்குடையவர்!

2020ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15ஆம் திகதி மறைந்த அவரின் சிரார்த்ததினம் ஜுலை முதலாம் திகதியாகும். அதை முன்னிட்டு, சுனாமிப் பேரலையைத் தொடர்ந்து அவர் எழுதிவைத்த குறிப்பு இங்கே தருவது பொருத்தமானதாக இருக்கும்.

### புதிய சூழ்நிலையும் புதிய அணுகுமுறைக்கான தேவைகளும்

கடலலையின் பாதிப்பானது வடக்கு - கிழக்கு மக்களின் சமூக, பொருளாதார சூழ்நிலையினை 50 வருடங்களுக்கு மேலாக பின்தள்ளியுள்ளது. அது மட்டுமன்றி சமாதானச் சூழ்நிலை மற்றும் அரசியல், இராணுவ சமன்பாடு தமிழ் மக்களுக்கு மிகப் பாதகமான முறையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளதோடு தென்னிலங்கை சக்திகளுக்கு புதிய வாய்ப்புகளையும் வளங்களையும் திறந்துவிட்டுள்ளது. தடைப்பட்டிருந்த நிதி உதவிகள் டோக்கியோ வாக்குறுதிகளை விட மிக அதிகமாக ஏற்கனவே இலங்கைக்கு கிடைக்க ஏற்பாடு [illegible] வடக்கு - கிழக்குக்கு கிடைக்கக் [illegible] இந்த மூலங்களில் இருந்து வழங்கப்பட இருக்கின்ற கடனின் கீழான திட்டங்களாகவே அநேகமாக இருக்கும். இவை தேசிய திட்டங்களாக இருக்கக் கூடிய நிலைமை இருப்பதனால் அதனூடாக இரண்டு நிலைமைகள் ஏற்படும் அபாயம் உண்டு. (1) சகல நடவடிக்கைகளும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் நடைபெறும். வடக்கு - கிழக்கில் பிரத்தியேக நிலைமைகளும், தேவைகளும் கணக்குக்கு எடுபடாது அடிபட்டுப் போகும். (2) திட்ட வடிவமைப்பின் மூலமாகவும் திட்ட அமுலாக்கல் முறைமை மூலமாகவும் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான சகல முன்முயற்சிகளும் பின்னோக்கித் திசைதிருப்பும்.

இருபக்க நன்கொடைகளில் தரமான கொடைகள் யாவும் ஏற்கனவே இனங்காணப்பட்டு திசைதிருப்பப்படுகின்றன. மத்தியவங்கி கடலலைப் பாதிப்பினால் நாட்டின் பொருளாதாரத்துக்கு எவ்வித பாதிப்புகளும் இல்லை என ஏற்கனவே அறிவித்து விட்டது. இக்கருத்து யாதெனில் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கும் ஏனைய பகுதிகளுக்குமான பொருளாதார இடைவெளி அதாவது தற்போதைய தந்திரோபாயங்கள், சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்படாதவிடத்து நிரந்தரமானதும் மாற்றமுடியாததுமாக இருக்கும்.

தெற்கில் ஏற்கனவே பெரும் தனியார் நிறுனங்கள் பல திட்டங்களை பாரமெடுக்க ஆரம்பித்துவிட்டன. வடக்கு கிழக்கில் தனியார்துறை வளர்வதற்கான சூழ்நிலை கடந்த 3 ஆண்டு காலத்தினுள் இயலாது போனதால் இத்தகையதொரு வாய்ப்புக்கு இடமில்லாது போனது. அத்துடன் அரசதுறையும் வடக்கு - கிழக்கில் பெரும் திட்டங்களை நிறைவேற்றும் ஆற்றல் அற்றவையாக உள்ளன. அபிவிருத்தி நிதி உட்பாய்ச்சலை பிரதான கேடயமாகக் கொண்டிருந்த சமாதானப் பொறி தகர்ந்துள்ளதால் அரசாங்கத்துக்கு சமாதானத்தின் பொருட்டோ அல்லது அபிவிருத்தி மூலவளங்களைத் தேடுவதன் பொருட்டோ புலிகளின் உதவிதேவையில்லை. அமெரிக்க, இந்தியத் துருப்புகள் வந்திறங்கியுள்ளன.

தெற்கில் மீன்பிடித்துறை புனருத்தாபனத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதால் அங்கிருந்து வரக்கூடிய மீன்பிடியாளர்கள் வடக்கு - கிழக்கு கடற்பரப்பின் முக்கியமான பங்காளிகளாகும் வாய்ப்பு இருக்கின்றது. ஏற்கனவே அமுலில் இருந்த சகல அபிவிருத்தித் திட்டங்களும் மீளவடிவமைப்புச் செய்யப்படவேண்டியுள்ளது. ஆனால் அமுலாக்கல் சூழலில் ஏற்படக் கூடிய சிக்கலான நிலைமைகள் வடக்கு - தெற்கு அபிவிருத்தி இடைவெளியை நிரப்புவதற்கு பெரும் மாற்றங்கள் நிகழாதவிடத்து 28 வருடங்கள் அல்ல அதனிலும் பல வருடங்கள் அதிகமாக எடுக்கலாம். வடக்கு - கிழக்குச் சூழ்நிலையில் உடனடியாக மாற்றம் ஏற்படாதவிடத்து வடக்கு - கிழக்கு சமூகம் என்றைக்குமே தலையெடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படலாம். ஆம், அவர் அன்று குறிப்பிட்டபடி நாம் அக்காலசூழலில் நடந்திருக்கின்றோமா? முன்நோக்கு சிந்தனையோடு அணுகியிருக்கின்றோமா? என்பதை சிந்தித்து இன்னும் செயற்படுவதற்கான வாய்ப்புகளை வட மாகாணசபை நிர்வாகக் கட்டமைப்பு பயன்நோக்காக கொள்ளுமா என்பதனை எங்கள்முன் சிந்தனைக்கு விட்டுச் சென்றுள்ளார். அவரது நோக்கும் சிந்தனையும் எமக்கு மென்மேலும் வழிகாட்டுவதாகுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிகுண்டு மிரட்டல் நீதிமன்றில் பரபரப்பு!

## கண்டியில் சம்பவம்

**கொழும்பு, ஜூலை 3**
**கண்டி நீதிமன்ற வளாகத்தில் வெடிகுண்டு இருப்பதாக பொலிஸ் அவசர சேவைக்கு நேற்றுக்காலை கிடைக்கப்பெற்ற தகவலை யடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.**

பொலிஸ் அவசர சேவைக்கு நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட அழைப் பின்போது, அடுத்த 30 நிமிடங்களில் வெடிகுண்டு வெடிக்கும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. இதனையடுத்து கண்டி பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் வெடிகுண்டு செயலிழக்க வைக் கும் பிரிவினர் நீதிமன்ற வளாகத்துக்கு விரைந்தனர்.

நீதிமன்ற வளாகத்தில் இருந்த பணியா ளர்கள் மற்றும் வழக்கு விசாரணைக்காக வருகை தந்தவர்கள் உடன் வெளியேற் றப்பட்டனர். இதனையடுத்து தேடுதல் வேட்டை இடம்பெற றது. கண்டி நகரி லும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. கண்டி நீதிமன்றத் தில் வழக்கு விசார ணைகள் அனைத் தும் நிறுத்தி வைக் கப்பட்டன. வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 16ஆம் திகதி வரை ஒத்திவைக் கப்பட்டுள்ளன. அதேவேளை, பொலிஸ் அவசரப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பிலும் விசாரணை ஆரம்பமாகியுள்ளது. வெடிகுண்டு மிரட் டல் விடுத்த கைபேசியின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர். எனினும் தன்னு டைய கைபேசி சிலநாள்களுக்கு நேற்று முன்தினமே தொலைந்துவிட்டதாக கைபேசியின் உரிமையாளர் தெரிவித் துள்ளார். மேலதிக விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-44)

### இடமாற்றம்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த **Kajamugan Tingering Work Shop** தற்போது இடமாற்றப்பட்டு 55/54 கல்லூரி வீதி நீராவியடியில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**ரட்ணம்**
தொடர்பு: **077 680 5923, 076 905 9331**
(CS 862) V-1

## தவறான முடிவெடுத்து பெண் பலி!

அல்வாய் கிழக்குப் பகுதியில் குடும்பப் பெண்ணொருவர் தவறான முடிவெடுத்து நேற்று உயிரிழந்துள்ளார்.

அல்வாய் கிழக்கு மாயக்கைப் பகுதியில் உள்ள பனைமரக்கூடலில் தூக்கிலிருந்து அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலம் உடற்கூற்றுச் சோதனைக்காகப் பருத்தித் துறை ஆதார மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாகப் பருத் தித்துறைப் பொலிஸார் மேலதிக விசார ணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-100-26-20-66)

### தலைமைக்காரியாலய மேல் கட்டடம் அமைப்பதற்கான கேள்வி மனுக்கோரல்
### மாந்தை தெற்கு ப.நோ.கூ.சங்கம்
### பிரதான வீதி, உயிலங்குளம்

பதிவு இலக்கம் MN/131 பதிவு திகதி-17.01.1971

**தொலைபேசி இலக்கம் - 023 205 1483**
**Email - mpcsmanthaisouth@gmail.com**

மன்னார் மாவட்டத்தின் உயிலங்குளம் பிரதேசத்தில் மாந்தை தெற்கு ப.நோ.கூ.சங்க தலைமைக்காரியாலய மேல்கட்டடம் அமைப்பதற்காக பொருத்தமான ஒப்பந்ததாரர் களிடமிருந்து கேள்வி மனுக்கோரப்படுகின்றது.

01. ஆர்வமுள்ள பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் சங்கத்தலைமை அலுவலகம் அமைந்துள்ள பிரதான வீதி உயிலங்குளத்தில் கடமை நாட்களில் காலை 9.30மணி தொடக்கம் மாலை 3.30மணிவரை வருகை தந்து இடத்தினை பார்வையிட்டு விண்ணப்பத்தை பூரணப்படுத்தி 12.07.2024ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் தலைமை அலுவலகத்துக்கு கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அன்றேல் பதிவுத்தபால் ஊடாகவோ **தலைவர். மாந்தை தெற்கு ப.நோ.கூ.சங்கம்** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும் போது **கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் தலைமைக் காரியாலய மேல் கட்டடம் அமைப்பதற்கான கேள்வி மனுக்கோரல்** என்று குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் காலதாமத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
02. கேள்வி மனுவானது இயக்குநர்சபைக் கூட்டத்தில் திறக்கப்பட்டு தகுதியானவர்களுக்கு கட்டடம் அமைப்பதற்காக ஒப்பந்தம் வழங்கப்படும்.
03. தகுதியற்ற விண்ணப்பங்களை நிராகரிக்கும் அதிகாரம் இயக்குநர்சபைக்கே உண்டு
04. கீழ் குறிக்கப்பட்ட முறையில் கேள்வி வைப்புத்தொகை அறவிடப்படும்.

| வேலை விபரம் | வேண்டப்படும் கேள்வி வைப்பு | |
|---|---|---|
| | மீளளிக்கக்கூடிய தொகை | மீளளிக்க முடியாத தொகை |
| கட்டடம் | 5,000.00 | 1,000.00 |

தலைவர்,
மாந்தை தெற்கு ப.நோ.கூ.சங்கம்
பிரதான வீதி, உயிலங்குளம்.
(cr.42757) (N-1)

## 32ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 • 06 • 1949
மறைவு 28 • 06 • 1992

அமரர்
### மாசிலாமணி தேவநேரு
(கிராம சேவகர்)

தங்களை இழந்த பின்
எம் வாழ்வில்
வரும் ஒவ்வொரு நிமிடமும்
முட் பாதைகளே அப்பா!

செட்டிவளவு லேன்,
இனுவில் மேற்கு,
இனுவில்.

மனைவி,
பிள்ளைகள்.

## நெஞ்சம் நெகிழும் 11 ஆம் ஆண்டு

மண்மகிழ 28 • 06 • 1940
கண் நெகிழ 03 • 07 • 2013



அமரர் உயர்திரு
### சின்னையா தவரெட்ணம் J.P
(முன்னாள் தலைவர். யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம். யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை பணிப்பாளர் சபை உறுப்பினர். வடமாகாண கடற்தொழில் அமைப்புத் தலைவர்)

தரணியில் அவதரித்த தவப்புதல்வன் பல பேருள் தவரெட்ணம் அவர்கள்
தனித்துவ மாமனிதர். மண்ணில் பிறந்தோர் எல்லாம் மரிப்பது இயற்கை எனினும்
மனங்களில் பிறந்தோருக்கு மரணம் என்றும் இல்லை.
மனிதருள் மாணிக்கமாய் மனங்களை வென்றீர் அப்பா!
மண்ணதில் புகுந்திட்டாலும் எம் மனங்களில் வாழ்வீர் அப்பா!
குடும்பத்தின் குலவிளக்காய் எமக்கெல்லாம் ஒளிவிளக்காய்
கடற்தொழிலாளர்களின் கருவூலமாய் காலமெல்லாம் வழிசெய்தீர்
காலன் உம்மைக் கவர்ந்தானே உடல்கள் சாகின்றன
உந்தன் நினைவுகள் சாவதில்லை அமைதியுடன் கண்ணுறங்கும் காலத்தில் வாழ்வீர் அப்பா!
ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்திக்கமாட்டோம் நாம் மீண்டும் நீர் பிறக்க வேண்டும்
இதுவே நம் பிரார்த்தனை காண அதுவரை ஈர விழிகளுடன்.

தவரெட்ணம் பிலோமினா
[illegible] ரோட், குருநகர்,
யாழ்ப்பாணம்.

உங்கள் பாசத்தினால் வாடும்
குடும்பத்தினர்
077 828 0029
(cs53141) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணத்தை...

ஜனாதிபதி ரணில் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்துக்கும் விமர்சகர்களுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. அதேபோல் அரசாங்கத்துக்கும் வெட்டிப் பேச்சாளர்களுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. அதேபோல வாய்ச் சவடால் பேர்வழிகளுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. நாம் நாட்டுக்காகச் சரியான கொள்கையுடன், சரியான பாதையில் பயணிக்கிறோம். அவர்கள் அதிகாரத்துக்காக நாளொன்றுக்கு ஒவ்வொன்றைக் கூறுகின்றனர்.

இதுகுறித்துக் கவனமாக அவதானிக்கும் தரப்பினரும் நாடாளுமன்றத்தில் உள்ளனர். பல அரசியல் கட்சிகளையும் சார்ந்தவர்கள் இந்த விடயங்கள் குறித்து சுயாதீனமாகவும், கட்சி சாராமலும் கண்காணித்து வருகின்றனர். அவர்கள் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். கட்சிக்காக அல்லது ஒரு தனி நபருக்காகச் செயற்படுவதா? அல்லது நாட்டுக்காகச் செயற்படுவதா? என்பது குறித்து கவனம் செலுத்துகின்றனர். இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நிலை என்ன? அந்த நிலைமையை மறந்துவிட முடியுமா?

பொருளாதார ரீதியாக மட்டுமன்றி, சமூக, அரசியல் ரீதியாகவும் அந்த நிலைமை மாறி கடன் மறுசீரமைப்புத் தொடர்பான நற்செய்தி வந்தபோது பலர் அதிருப்தியடைந்ததைக் காணமுடிந்தது. மண்ணெண்ணெய் பட்ட சாரைப் பாம்பைப் போல நடந்துகொண்டனர். சமூக வலைத்தள மொழியில் கூறுவதாயின், உடம்பில் கம்பளி பூச்சி ஊர்ந்து செல்வதுபோல் இருந்தது. ஏன் அது?

ஐ.எம்.எப். வேலைத் திட்டம் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது நற்செய்தியா? துயரச் செய்தியா?

எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசைகளில் பல நாள்கள் இனிமேல் காத்திருக்கவேண்டியிருக்காது என்பது நற்செய்தியா? துயரச் செய்தியா?

30 வீதத்துக்கும் மேலாக இருந்த வங்கி வட்டிவீதம் 9 வீதம்வரை குறைக்கப்பட்டுள்ளமை நற்செய்தியா? துயரச் செய்தியா?

70 சதவீதத்துக்கும் மேலாகச் சென்ற பணவீக்கம் கடந்த மாத இறுதியில் 1.7 வரை குறைந்திருப்பது நற்செய்தியா? துயரச் செய்தியா?

தொடர்ச்சியாக 6 காலாண்டுகள் ஆட்டம் கண்ட எமது பொருளாதாரம், வளர ஆரம்பித்தது நற்செய்தியா? துயரச் செய்தியா?

2022 ஆம் ஆண்டு மே மாதமளவில் அதலபாதாளத்தில் வீழ்ந்து, வற்றிப் போயிருந்த அந்நியச் செலாவணிக் கையிருப்பு 5 ஆயிரத்து 410 மில்லியன் டொலர் வரை அதிகரித்திருப்பது நற்செய்தியா? துயரச் செய்தியா?

ரூபா வலுவடைந்திருப்பது நற்செய்தியா? துயரச் செய்தியா?

அடிப்படை வைப்புக் கணக்கில் உபரி ஏற்பட்டுள்ளமை நற்செய்தியா? துயரச் செய்தியா?

பணத்தை அச்சிடாமல், வரவு - செலவுத் திட்ட துண்டுவிழும் தொகையை நிவர்த்தி செய்வது நற்செய்தியா? துயரச் செய்தியா?

வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கலுக்கான நடைமுறைக் கணக்கில் உபரி ஏற்பட்டது நற்செய்தியா? துயரச் செய்தியா?

காலிமுகத்திடல் மைதானத்தில் அடிவாங்காமல் செல்ல, சுதந்திரம் இல்லாதிருந்த கட்சித் தலைவர்களுக்கு, நாட்டின் தெற்கில் இருந்து வடக்கு வரை சென்று வர முடிந்துள்ளமை நற்செய்தியா? துயரச் செய்தியா?

நாடாளுமன்றத்துக்கு வருவது மட்டுமன்றி வீடுகளில்கூட இருக்க முடியாமல் இருந்த நாட்டில், எந்தச் சந்தேகமும் அச்சமும் இன்றி வாழக்கூடிய நிலை உருவானது நற்செய்தியா? துயரச் செய்தியா?

நாடு நல்ல நிலையை அடைவது நற்செய்தியா? துயரச் செய்தியா?

இங்கிருந்து முன்னேறிச் செல்வதற்கு எமக்கிருக்கும் ஒரேவழி இதுவாகும். நற்செய்தியை எதிர்காலம் வரை கொண்டு செல்வதற்கான ஒரேவழியும் இதுவாகும். கடந்த காலத்தில் நாம் பெற்ற வெற்றிகள் ஊடாக அது மீண்டும் உறுதிசெய்யப்பட்டுள்ளன.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். அரசியல் அதிகாரத்திற்காகவோ, அரசியல் பிரசித்தத்திற்காகவோ நான் தீர்மானங்களை எடுப்பதில்லை. நாட்டுக்காகவும், இளைஞர்களின் எதிர்காலத்திற்காகவுமே நான் தீர்மானங்களை எடுக்கிறேன். கடந்த இரண்டு வருடங்கள் நான் அரசியல் செய்யவில்லை. அரசியல் இலாபங்களைப் பெறுவதற்காகத் தீர்மானங்களை எடுக்கவில்லை - என்றார். (அ-ம-26)

## ஆள் மாறாட்டம்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரொருவர் புலம்பெயர்ந்து வெளிநாடொன்றில் வசித்து வருகின்றார். அவர் தனது காணிக்கான அற்றோணித்தத்துவ அதிகாரத்தை தனது ஒன்றுவிட்ட சகோதரிக்கு வழங்கியிருந்தார். இந்த நிலையில், காணி உரிமையாளரின் சொந்தச் சகோதரி பிறிதொரு தேவையைக் காரணம்காட்டி ஒன்றுவிட்ட சகோதரியிடமிருந்து உறுதியைப் பெற்றுச்சென்று மோசடியாக உரிமை மாற்றம் செய்துள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், காணி மோசடி செய்த சகோதரியைக் கைது செய்தனர். அவர் ஆள்மாறாட்டம் செய்வதற்கு உதவிய பிறிதொரு பெண்ணும் கைதுசெய்யப்பட்டார்.

இவரும் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஆனந்தராஜாவின் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது, 10 ஆயிரம் ரூபாவுக்காகவே தான் ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட பெண் ஒப்புக்கொண்டார். இதையடுத்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆள்மாறாட்டத்துக்குத் துணைபோன பெண் (10 ஆயிரம் ரூபாவுக்காகக் கையொப்பம் வைத்தவர்) கொழும்பைச் சேர்ந்தவர் என்றும், சுன்னாகத்தில் தற்காலிகமாக வசித்தபோதே இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார். சட்டத்தரணியின் முன்னிலையில் கையொப்பம் வைத்த போது தான் நோய்வாய்ப் பட்டுள்ளதாகத் தெரிவித்து அவர் மாஸ்க் அணிந்திருந்தார் என்றும் [illegible]

தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## புலிகளுக்கு...

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான நலிந்த ஜயதிஸ்ஸ நேற்றுத் தெரிவித்தார்.

1988 மற்றும் 1989 ஆம் ஆண்டு காலப் பகுதியில், விடுதலைப் புலிகளுக்கு ஜே.வி.பி.யினர் ஆயுதம் வழங்கினர் என இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் அண்மையில் தெரிவித்திருந்தார். அவருடைய இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் நேற்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியபோதே, பிள்ளையானின் குற்றச்சாட்டை மறுப்பதாக நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நலிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்ததாவது:-

"இராஜாங்க அமைச்சர் பிள்ளையானின் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கின்றோம். இதற்குப் பதிலளித்தும் பயன் இல்லை. தேசிய மக்கள் சக்தியுடன் முப்படைகளில் இருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகள் இணைந்துவருகின்றனர். அதேபோல ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களும் இணைந்து செயற்படுகின்றனர். இவ்வாறு நாட்டைப் பாதுகாத்த படையினர், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினருடன் நாம் பயணிக்கின்றோம்.

ஆனால், கருணா அம்மான், பிள்ளையான் போன்றோரை இணைத்துக் கொண்டு ரணில் செயற்படுகின்றார். அவரின் ஆலோசனையின் பிரகாரம் தான் பிள்ளையான் அந்தக் கதையைக் கூறியிருக்கலாம். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையானுக்கு எதிராகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரிக்கப்படவேண்டும்.

பிள்ளையான், கருணா அம்மான் போன்றோரை இணைத்துக்கொண்டு ரணிலால்தேசிய மக்கள் சக்தியின் பயணத்தை நிறுத்தமுடியாது. கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற கொலை, கொள்ளை, கப்பம் பெறுதல் போன்ற சம்பவங்கள் தொடர்பிலும் எமது ஆட்சியில் விசாரிக்கப்படும் - என்றார். (அ-ம-44)

## அதிகாரப்...

இரா.சம்பந்தனின் மறைவு தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் இந்த உரையாற்றும்போது, அன்று என்னுடன் நாடாளுமன்றத்துக்கு வந்தவர்களில் எஞ்சியிருந்த எனது சகாக்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் இப்போது எங்களுடன் இல்லை. மிகவும் கடினமான காலகட்டங்களில் அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் ஆற்றிய பங்களிப்பை நன்றியுடன் நினைவுகூருகிறேன். அவர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும், அவர் எப்போதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்காகவே பங்காற்றினார்.

ஒருமுறை அவர் என்னுடன் உரையாற்றும்போது "ரணில், நான் நாட்டைப் பிரிப்பேன் என்று நினைக்கிறீர்களா? நான் சிறுவனாக இருந்தபோது, 1948 ஆம் ஆண்டில் நாடு சுதந்திரம் பெறுவதைப் பார்க்கச் சென்றிருந்தேன்" என்று அவர் என்னிடம் குறிப்பிட்டார்.

அதனைக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை. எம்மில் பலர் அப்போது பிறக்கவே இல்லை. ஆனால், அதிகாரப்பகிர்வு தொடர்பில் அவர் தனித்துவமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அதைப்பற்றி விவாதம் செய்ய அவசியமில்லை. அவர் அதற்கான போதுமான பங்கை செய்துள்ளதாக நினைக்கிறேன். அதனை நிறைவுசெய்ய இன்னும் கொஞ்சம் பங்காற்ற வேண்டியுள்ளது. மேலும் அந்த வேலைகளை நிறைவுசெய்வதே அவருக்குச் செய்யக் கூடிய மிக உயர்ந்த பங்களிப்பாக இருக்கும் - என்றார். (அ-ம-26-125)

## சட்டத்தரணி...

நிலையில், இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

பொலிஸ் விசாரணைகளில், உடுவில் பகுதியில் உள்ள சட்டத்தரணியொருவர் கனிஷ்ட சட்டத்தரணிகள் மூலமாக ஆள் மாறாட்டம் செய்து, மேற்படி தம்பதியர்கள் விவாகரத்துப் பெற்றுக்கொள்வதாக நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டமை தெரியவந்தது. இதையடுத்து, இது தொடர்பில் குறித்த சட்டத்தரணியின் அலுவலகத்தில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் பொலிஸார் அனுமதி பெற்றதையடுத்தே இந்தச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## முரல்மீன்...

துக் கொண்டிருந்தபோது, முரல்மீன் பாய்ந்து டினோஜனின் கழுத்தில் ஏறியுள்ளது. இதன்போது படுகாயமடைந்த அவர் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட போதிலும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டாரென மருத்துவர்கள் தெரிவித்தனர்.

கழுத்தில் முரல்மீன் பாய்ந்ததால் ஏற்பட்ட காயமே இறப்புக்கான காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி திருமதி வின்சன் தயான் மேற்கொண்டார். (அ-ம-26-20-125-66)

## தேசிய...

என. இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக அந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவினர் கட்சியின் தலைவர் சஜித்தின் தலைமையில் நேற்று ஒன்றுகூடினார்கள். இதன்போதே தேசிய அரசு அமைக்கும் முயற்சிகளை ஆதரிப்பதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி தீர்க்கமாக முடிவெடுத்துள்ளது. (அ-ம-44)

## சம்பந்தனின்...

சம்பந்தனின் புகழுடல், கொழும்பு பொரளையிலுள்ள தனியார் மலர்ச்சாலையில் நேற்று அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இதன்போதே நேற்றுக்காலை முதல் பிரமுகர்கள் பலரும் அவரின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். இதைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தில் இன்று பிற்பகல் சம்பந்தனின் உடல் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. அதைத் தொடர்ந்து அவரின் புகழுடல் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதச் செயல்கள் முல்லையில் முறியடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் சட்டவிரோத மணலகழ்வு மற்றும் மரக் கடத்தல் என்பன முல்லைத்தீவு மாவட்ட விசேட அதிரடிப்படையினரால் முறியடிக்கப்பட்டு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது.

இதன்போது மணலகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனம், ஜே.சி.பி. இயந்திரம் என்பனவும் கைப்பற்றப்பட்டன. சான்றுப் பொருள்களும் சந்தேகநபர்களும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

# மடு ஆலய வீதிக்கு சமிக்ஞை பொருத்துக

மன்னார், ஜூலை 3

மடு வீதியிலிருந்து மடு ஆலயத்துக்கான வீதியில் வாகன வேகக் கட்டுப்பாட்டைத் தடுப்பதற்காக சமிக்ஞை விளக்குகளைப் பொருத்தவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

மடு வீதியிலிருந்து மடு ஆலயத்துக்கான வீதியின் இரு பக்கங்களும் காணப்பட்ட பற்றைகள் துப்புரவு செய்யப்பட்டு வீதி சீரமைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த வீதியில் வாகனங்களின் வேகக் கட்டுப்பாட்டை குறைப்பதற்கு வீதிச் சமிக்ஞை விளக்குகளை அதிகாரிகள் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரியுள்ளனர். (ப-60)

# இளைஞர் கைது

சுழிபுரத்தில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். விசேட ரோந்து நடவடிக்கையின்போது இந்தக் கைது இடம்பெற்றது.

750 மில்லி லீற்றர் கசிப்பு சந்தேகநபரிடமிருந்து மீட்கப்பட்டது. சந்தேகநபரை சட்டநடவடிக்கைக் குட்படுத்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-125)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:

077 474 2818

## விசாக்கான Show money

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%
- visit visa
- student visa
- fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்.

(CS/55563) J-1

தொடர்பு:- 075 033 6759

## வேலையாள் தேவை

வீட்டில் தங்கி நின்று முதியவர் ஒருவரை பராமரிப்பதற்கு வேலையாள் தேவை.

30 - 45 வயதிற்குட்பட்டவர்கள்.

(CS/55572) N-1

தொடர்பு :- 077 177 8152

## அலுவலக உதவியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் **P.P.T** நிறுவனத்திற்கு அலுவலக வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவைப்படுகிறார்கள் ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். தங்கிநின்று வேலை செய்யக்கூடிய ஆண்கள் இருப்பின் விரும்பத்தக்கது.

மாதசம்பளம்: 40000/= மேல்

மேலதிக தகவல்கள்: **B.Jude** (உரிமையாளர்)

077 386 6250
077 573 1318

## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

(CS/55548) J-1

தொடர்புகளுக்கு:

074 173 7684

## சமையலாள் தேவை

யாழ் நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை.

தேவை ஏற்படின் தங்குமிட வசதியும் உண்டு.

T.P: 077 959 2628

## கட்டடம் வாடகைக்கு

யாழ். கஸ்தூரியார் வீதியில், முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் 25'X36' நீள அகலம் உடைய காட்சியறை/ வர்த்தகம்/ வியாபாரம் வேறு தேவைகளுக்கும் உகந்தது.

(CS/55559) J-1

தொடர்பு:- 077 737 4726

## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் A9 வீதியில் இருந்து 500 M தொலைவில்.

4 அறைகளுடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்குண்டு.

15 தென்னை மரங்களும் உண்டு.

தொடர்புகளுக்கு.

075 503 5347

(விமலாஸ் வீடு)

(CR/42756) (N-1)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் உள்ள பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- வரவேற்பாளர் (Receptionist)
- துப்புரவு பணியாளர் (Room Cleaners)
- விற்பனைப் பிரதிநிதி (Sales Rep)

(Driving License வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது)

- DRIVER
- Electrician
- Kitchen Helper
- Waiter
- Room Boy
- House Keeping

25- 35 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(CS/55571) J-1

தொடர்பு:- 076 012 0283


## மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 06 . 1942

இறப்பு 28 . 06 . 2024



### கதிர்காமு முருகப்பெருமான்

(யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை 769 வழித்தட நேரக்காப்பாளர் மற்றும் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய பிரதான நேரக்காப்பாளர் (1990-1995 வரை)

"தமிழகம்" வேவரி, குரு வீதி, காங்கேசன்துறை என்ற முகவரியை பிறப்பிடமாகவும், இலக்கம் 03, இடைக்கட்டு (செஞ்சோலை வளாக வீதி), வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு என்ற முகவரியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கதிர்காமு முருகப்பெருமான் கடந்த (28.06.2024) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - அம்மணி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ஆண்டி - தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற க.தெய்வரத்தினம் (தெய்வம்), க.மகாலிங்கம் (மகான்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரிகா (சூட்டி), மதிவாணன், ஜானார்த்தன், மிதிலைச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வகுமார் (ரமேஸ்), தயாக்கினி, சுகிந்தினி, சசிகரன் (குட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கனியவள், கரிகாலன், எல்லாளன், ரூபிசா, பிரவஸ்தி, கவின், பிரபாகரன், பிரதீபன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 03, இடைக்கட்டு (செஞ்சோலை வளாக வீதி), வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு என்ற முகவரியில் உள்ள வசிப்பிடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2024) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இடைக்கட்டு, வள்ளிபுனத்தில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 4.00 மணியளவில் வள்ளிபுனம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்பட உள்ளது. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மு.மதிவாணன் (மதி) - 077 547 7638
ஊடகவியலாளர் (சக்தி TV)

தகவல்:
குடும்பத்தினர்

(CR/42759) J-1

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 10.09.1989



உதிர்வு 20.05.2024

### அமரர் தியாகராசா தயானன்

(Bala Enterprises, Ganeswaram Alaveddy - உரிமையாளர்)

(அகில இலங்கை சமாதான நீதவான்)

**நாட்கள் 45 கடந்தாலும் ஆறிடுமோ உங்கள் நினைவலைகள்!**

நெடுந்தூர வாழ்க்கைப் பயணம்
பாதி வழியில் விலகியது ............
காலங்கள் கனவாகிப் போனதால்
எம் கண்ணீர்த் துளிகளின் ஈரம்
இன்னும் காயவில்லை
நாள்கள் 45 ஆகிய போதிலும்
வாழும் காலம் வரை உம்நினைவுகளோடு .........

அளவெட்டி,
கணேஸ்வரம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.